ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 453) Oct (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

3. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்).......................................29

4. பெரிய திருமொழி (வ்யாக்யானம்)...33

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 271)

113. தர்பயத்யகிலம் ஸ்தூலம் ஸ்தூல ரூபேண தஜ்ஜகத்
ஸத்த்வாத்மநா து ஸூக்ஷ்மேண ஸஸுராம்ஸ்தர்பயேத் பித்ரூந்

பொருள் – ஒருவன் ஸ்தூல ரூபத்தில் உள்ள இந்த ஜகத்தை ஸ்தூல வடிவத்தில் உள்ள நீர் கொண்டு வணங்கவேண்டும். பித்ருக்களையும் தேவர்களையும் ஸூக்ஷ்ம ரூபத்தில் உள்ள நீர் கொண்டு வணங்கவேண்டும்.

114. பரேண ஆனந்தரூபேண நயேந்மத் கர்மயோக்யதாம்
தஸ்மாத் சுத்தி: புரா கார்யா தீர்தே சாஸ்த்ரத்ருசா ஸ்வயம்

பொருள் – தூய்மையான ஆனந்த ரூபத்தில் உள்ள நீர் கொண்டு எனது ஆராதனையைச் செய்யவேண்டும். ஆகவேதான் ஒருவன் சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட விதிப்படி, தன்னைத் தானே தூய்மை செய்து கொள்ளவேண்டும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 418)

திருவாய்மொழி ஆறாம் பத்து எட்டாம் திருவாய்மொழி
பொன்னுலகு ப்ரவேசம்

வ்யாக்யானம் - கீழில் திருவாய்மொழி இரண்டும் மோஹமும் உணர்த்தியுமாய், இதில், ப்ரேஷணமாயிறே யிருக்கிறது; "மயர்வற மதிநலம் அருள"ப்பெற்ற இவர்க்கு, "மரணாயார்த்த ஸம்பத்தி:" என்னும் மோஹமில்லையே.

விளக்கம் – ஆழ்வார்களுடைய மயக்க நிலை மற்றும் தெளிந்த நிலை ஆகியவை நாட்டில் உள்ள மற்றவர்களுடைய இந்த நிலைகளைக் காட்டிலும் வேறுபட்டவை ஆகும் என்பதை உணர்த்தவல்ல கருத்துக்களைக் கடந்த இரண்டு திருவாய்மொழிகளும் மயக்கம் மற்றும் தெளிந்த நிலை ஆகியவற்றை உணர்த்துவதாகவும், இந்தத் திருவாய்மொழியானது, தூது விடுதலில் ஈடுபடுவதாகவும் அல்லவோ உள்ளது? ஆனால், மிக்க ஞானம் கொண்ட ஆழ்வாருக்கு "விழிப்பு, ஸ்வப்னம், ஆழ்ந்த உறக்கம்" என்பது போன்றவற்றுடன் சேர்த்துக் கூறப்படுவதாகிய, மயக்க நிலையானது ஏற்படுமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; "மயர்வற மதிநலம் அருளப் பெற்ற" ஆழ்வாருக்கு, "மரணாயார்த்த ஸம்பத்தி: - மரணத்தின் பாதி நிலை - என்பதாகக் கூறப்படும் மயக்கம் இல்லை. விழிப்பு நிலை, கனவுகளுடன் கூடிய உறக்கம், ஆழ்ந்த உறக்கம், மயக்கம், மரணம் என்பதாக ஐந்து நிலை உள்ளன. இவற்றில், விழிப்பு நிலை எனப்படும் "ஜாக்ரத்" நிலையில், வெளி இந்த்ரியங்களும் அந்தகரணமும், தங்கள் தங்கள் விஷயங்களை

அறியவல்ல நிலையாகும். "ஸ்வப்ந நிலை" என்பது, வெளி இந்திரியங்கள் அடங்கி, மனம் மட்டும் ஸஞ்சரித்தபடி, இந்தச் சரீரம் போன்று மற்ற சரீரங்களையும், பகலில் காண்கின்ற விஷயக்கள் போன்ற மற்ற விஷயங்களையும் ஈச்வரன் ஸ்ருஷ்டிக்க, அதன் விளைவாக, தான் முடிசூட்டிக் கொள்ளுதல் தொடங்கி, தனது அறுபடுதல் முடிய உள்ள பலவற்றையும் காணுதல் ஆகும். ஆழ்ந்த உறக்கம் என்னும் ஸுஷுப்தியானது, வெளி இந்த்ரியங்களும் மனமும் அடங்க, வெளிவிடுதல் மட்டும் உள்ளிழுத்தல் என்பதாக ப்ராணன் மட்டுமே ஸஞ்சரித்தபடி, விழிப்பு நிலையில் தங்கள் தங்கள் விஷயங்களில் இந்த்ரியங்கள் ஈடுபட்ட காரணங்களால் ஏற்பட்ட களைப்பு முற்றிலும் நீங்கும்விதமாக, புரீதத் என்ற நாடியில் பரமாத்மாவின் ஸ்வரூபத்துடன் சேர்ந்து, அவனால் தனது சிரமங்கள் அனைத்தும் நீங்கப் பெறுதல் ஆகும். மயக்கம் என்னும் மூர்ச்சை நிலையானது, ஸூக்ஷ்ம ப்ராணன் மற்றும் ஸூக்ஷ்ம சரீரம் ஆகியவற்றுடன் சேர்ந்துள்ள ப்ராணன்களும் கூட, சரீரத்துடன் தாங்கள் கொண்டுள்ள ஸம்பந்தத்தை நீங்குதல் ஆகிறது. "இப்படிப்பட்ட மரணத்தின் பாதி நிலையாக மூர்ச்சை உள்ளது" என்று வேதாந்தத்தில் கூறப்பட்டதைக் கொண்டு, சாரீரக மீமாம்ஸை (3-2-10) – மரணாயார்த்த ஸம்பத்தி: - மரணத்தின் பாதி நிலை- என்கிறார்.

வ்யாக்யானம் - இனி இவர்க்கு மோஹமாவது, பாஹ்ய பதார்த்தாநுஸந்தாந க்ஷமரன்றிக்கே, விஷயங்களில் நின்றும் அந்த:கரணம் நிவ்ருத்தமாய், மநஸ்ஸுக்கு அவனே விஷயமாய், அவன் குணங்களையே அநுபவிக்கை: அதாவது, சரீரியானவனே ஜ்ஞாநத்துக்கு விஷயமாய்த் தன்னை மறக்கை. கீழ், "அஹம் மநுரபவம்" என்றும், "ஸர்வகத்வாதநந்தஸ்ய" என்றும் சொல்லுகிற நிலைபோலே. உணர்த்தியாவது, "ப்ரஹ்லாதோஸ்மீதி ஸஸ்மார" என்கிற ஸ்ரீப்ரஹ்லாதனைப்போலே தம்மையுமுணர க்ஷமராய், ஜகத் வ்ருத்தாந்தத்தையும் அநுஸந்திக்க க்ஷமராகை.

விளக்கம் - அடுத்து ஆழ்வாருடைய மயக்கத்தன்மையை அருளிச்செய்கிறார். இவருக்கு மயக்கம் என்பது, வெளி உலக விஷயங்களை எண்ணுவதற்கும் இயலாதவராக, அந்த விஷயங்களிருந்து அந்தகரணம் விடுபட்டதாக, மனதிற்கு அவன் மட்டுமே விஷயமாக, அவன் குணங்களை மட்டுமே அனுபவித்தபடி இருத்தல் ஆகும். அதாவது, தனது ஆத்மாவாக உள்ள அவனே ஞானத்திற்கு

விஷயமாக நிற்பதால், தன்னையே மறந்திருத்தல் ஆகும். அடுத்து “மாலுக்கு வையம்” மற்றும் “உண்ணும் சோறு” ஆகியவற்றால் ஏற்பட்ட மயக்கம் மற்றும் தெளிதல் ஆகிய இரண்டையும் உதாரணத்துடன் கூறுகிறார். “மாலுக்கு வையம்” என்ற திருவாய்மொழியானது, ப்ருஹத் உபநிஷத்தில் - அஹம் மநுரபவம் - நான் மநு ஆவேன் - என்றும், ஸ்ரீவிபு. (1-19-85) – ஸர்வகத்வாதநந்தஸ்ய – அவன் எங்கும் உள்ளதால், நான் அவனாகவே உள்ளேன் - என்றும் கூறுகிற நிலை போன்று மயக்க நிலை ஆகும். “உண்ணும் சோறு” என்பதில் உள்ள தெளிந்த நிலையானது, ஸ்ரீவிபு. (1-20-7) - ப்ரஹ்லாதோஸ்மீதி ஸஸ்மார - தன்னை அவன் ப்ரஹ்லாதன் என்றே எண்ணினான் - என்பதற்கு ஏற்ப, ஸ்ரீப்ரஹ்லாதன் போன்று தன்னை எண்ணக்கூடியவராகவும், உலக நிகழ்வுகளையும் எண்ணக் கூடியவராகவும் உள்ளதாகும்.

வ்யாக்யானம் - நிர்க்குணமான விஷயத்திலேயன்றே இவர் அவகாஹித்தது; குணாதிக விஷயத்திலேயிறே. சேக்ஷிபக்கலிலே அநுஸந்தாநமானால் சேஷபூதனான தன்னையும் காணுமிறே. கீழ், நெடும்போது அவன் குணங்களை அநுஸந்திக்கையாலே தரித்து பலஹாநி நீங்கி பாஹ்ய பதார்த்தாநுஸந்தாந க்ஷமரானார்; அவ்வளவிலே, இவர் தரித்தவாறே பழைய அலாபமே தலையெடுத்து ஒரு பிராட்டி தசையைப் ப்ராப்தராய் அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

விளக்கம் - ஆனால், ”மாலுக்கு வையம்” திருவாய்மொழியில், தன்னால் எண்ணப்படும் விஷயமானது, தனக்கு மேல் வேறு எதுவும் இல்லை என்று கூறும்படியாக இனிமை கொண்டதாகவும், தான் எல்லையற்ற ப்ரேமை கொண்டவராகவும் உள்ளதால், ஒரே சிந்தனையுடன் கூடிய அனுபவம் இவருக்கு நிலைத்தது. ஆனால் “உண்ணும் சோறு” திருவாய்மொழியில் தம்மை உணர்ந்தவராக, அதே போன்று அனுபவிப்பாரோ என்பதற்கு விடை அளிக்கிறார்; குணங்கள் அற்றதான நிர்க்குண வஸ்துவைக் குறித்து இவர் மூழ்கி அனுபவிக்கவில்லை; மாறாக, குணங்களின் இருப்பிடமாக உள்ள விஷயத்தில் அல்லவோ இவர் இவ்விதம் செய்தார்! எஜமானன் குறித்து சிந்தனை ஏற்பட்டால், அடிமையான தன்னைக் குறித்த சிந்தனையும் உண்டாகும் அல்லவோ? அவன் குணங்கள் குறித்துப் பல காலம் எண்ணியபடி உள்ளதால், தான் தனது உயிரைத் தரித்தவராக, வலிமைக் குறைவு நீங்கியவராக, வெளிப்பொருள்களையும் எண்ணக்

கூடிய நிலையை அடைந்தார். இப்படியாக இவர் உயிர் தாங்கியதால், தனக்கு முன்பு கிட்டாத விஷயம் குறித்த சிந்தனை ஏற்பட்டு, ஒரு பிராட்டியின் நிலையை அடைந்தவராக, மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும்விதமாகக் கூறுகிறார்.

வ்யாக்யானம் - கீழில் திருவாய்மொழியில், திருத்தாயார், "எங்ஙனே புகுங்கொல்?" என்று நொந்ததுவே பலித்து, தன் சாபலத்தாலே புறப்பட்டாள். முடியப்போய்ப் புகமாட்டாமை தன்னுடைய நகரோபவநத்திலே விழுந்து கிடந்து, அவ்வளவிலும் அவன் வரக் காணாமையாலே, கண்ட பக்ஷிகளைத் தூது விடுகிறாள். தனிவழியே புறப்பட்டுப் போம்படியாய் விழுந்த இவளுக்குத் தூது போவாரில்லையே; உண்டானாலும் இவள் தனக்கு முன்னே ஈடுபட்டுக் கிடப்பர்களே; இனித் தன் பரிஸரத்தில் வர்த்திக்கிற பக்ஷிகளுக்கு மேற்படக் கால்நடை தந்து போக வல்லாரில்லையே; இவ்வளவில் நீங்கள் என் தசையை அறிவிக்கவேணுமென்று அவற்றின் காலிலே விழுகிறாள்.

விளக்கம் - கடந்த திருவாய்மொழியில், திருத்தாயார் "இவள் அங்கு சென்று என்ன செய்யப்போகிறாளோ?", என்று நொந்து கொண்டு உரைத்தாள்; அது பலித்துவிட்டது. தனது எல்லையற்ற ஈடுபாடு காரணமாக அங்கு புறப்பட்டுச் சென்றவள், அந்த நகரத்தில் புக இயலாமல், தனது நகரத்தை அடுத்துள்ள ஒரு உபவனத்தில் விழுந்து கிடந்தாள். அப்போதும் அவன் வரவில்லை. ஆகவே பராங்குசநாயகியான இவள், தான் கண்ட பறவைகள் பலவற்றையும் தூது விடுகிறாள். பறவைகளை ஏன் தூது விடவேண்டும், வேறு யாரும் இல்லையோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். இவளுக்குத் தூது செல்பவர்கள் யாரும் இல்லை; "மங்கைமார் முன்பு" என்று கூறப்பட்ட தோழிகள் யாரும் இல்லையோ என்பதற்கு விடை அளிக்கிறார்; அப்படியே இருந்தாலும், இவளுக்கு முன்பாக அவர்களும் இந்த விஷயத்தில் ஈடுபட்டு, அங்கு விழுந்து கிடப்பார்கள். ஆகவே, தன் பக்கத்தில் வசிக்கும் பறவைகள் அல்லாமல் அங்கு கால் நடையாகச் சென்று இவளுடைய தூது செய்தியை அவனிடம் தரும்படியாகச் செல்பவர்கள் வேறு யாரும் இல்லை. இப்படி உள்ளதால், "நீங்கள் எனது நிலையை அவனுக்கு உணர்த்தவேண்டும்", என்று பறவைகளுடைய கால்களில் விழுகிறாள்.

வ்யாக்யானம் - “அஞ்சிறைய மடநாரை”யில், என்னை நினைத்தானத்தனை, தன்னை மறந்தானென்றாள்; இத்தலையில் அபராதம் பாராதே, அத்தலையில் அபராத ஸஹத்வம் பற்றாசாக, அபராத ஸஹத்வத்தைப் பார்த்து வருவதென்று ஆள்விட்டாள். “வைகல் பூங்கழிவாயி”ல், இருவரையும் அவ்வூரில் போக்யதை மறக்கப் பண்ணிற்று என்றாள்; விசேஷஜ்ஞனாகையாலே ஆர்த்தியை அறிவிக்க வருமென்று ஆர்த்த ரக்ஷணம் பற்றாசாகத் தூதுவிட்டாள்.

விளக்கம் - ஆனால் முன்பு இரண்டு முறை இதே போன்று தூதுவிட்டாள் அல்லவோ, அதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு என்பதற்கு விடை அளிக்கிறார்; “அஞ்சிறை மட நாராய்” என்பதில், “அவன், பாபம் செய்த என்னை ‘இவள் இப்படியாகப் பாபம் செய்தாள்’ என்று எண்ணினால் அல்லாமல், அபராதங்களைப் பொறுத்துக் கொள்ளும் தன்னையும், தனது அந்த குணத்தையும் எண்ணவில்லை”, என்றாள். ஆகவே அங்கு, தனது விஷயத்தில் உள்ள பாபங்களை ஆராயாமல், பாபங்களைப் பொறுத்தும் கொள்ளும் அவனுடைய தன்மையை மட்டும் பற்றுக்கோலாகக் கொண்டு, அத்தகைய “அபராதத்தை பொறுத்துக் கொள்ளும் தன்மை” என்பதை முன்னிட்டு வரவேண்டும் என்பதாக ஒரு செய்தி அனுப்பினாள். அடுத்த தூது திருவாய்மொழியான “வைகல் பூங்கழி” என்பதில், பிரிந்தால் தரித்திருக்கப் போகாத மேன்மை கொண்ட அவனையும் மற்றும் பிரிந்தால் தரித்திருக்க இயலாத துன்பம் கொண்ட தன்னையும் என்பதாக உள்ள இருவரையும், அந்த ஊரின் இனிமையானது மறக்கச் செய்தது என்றாள். ஆகவே சிறந்த ஞானம் கொண்டவன் என்பதால், எனது துன்பத்தை உணர்ந்து வருவான் என்று தீர்மானித்து, “துன்பத்தில் காப்பாற்றும் தன்மை” என்பதைப் பற்றுக்கோலாகக் கொண்டு தூதுவிட்டாள்.

வ்யாக்யானம் - இத்திருவாய்மொழியில், வாராமைக்கு அடி, பரப்பனாகை யென்று பார்த்தாள்; “தன் மன்னு நீள் கழல் மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்” என்கிறபடியே அஸாதாரணமானதன்றிறே வடிவு; ஆச்ரிதரோடு ஏகாஸனாகையிறே என்று பார்த்து ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள். பல பாட்டுக்களிலும் “இதுவோ தக்கவாறு என்கையாலே, ஆந்ருசம்ஸ்யம் பற்றாசாகத் தூது விடுகிறாள்” என்று பிள்ளான் பணிக்கும்படி.

விளக்கம் – இந்தத் திருவாய்மொழியில், அவன் வராமல் உள்ளதன் காரணம், அவனுடைய பரவியிருக்கும் தன்மை என்று பார்த்தாள்; திருவாய்மொழி (6-8-6) – தன் மன்னு நீள் கழல் மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான் - என்பதற்கு ஏற்ப, அவனுடைய திருமேனியானது அவனுக்கே உரிய தன்மை கொண்டது அல்லவோ? தனது அடியார்கள் அனுபவிக்கும் இன்பத்தையே அவன் தனது இன்பமாகவும் கொள்வதால், அத்தகைய ஒரே இன்பத்தைப் பற்றுக்கோலாகக் கொண்டு தூது விடுகிறாள். இங்கு பிள்ளான், "பல பாசுரங்களிலும் 'இதுவோ தக்கவிதம்' என்று கூறுவதால், அவன் உயிர்களிடம் கொண்டுள்ள அருள் நிறைந்த தன்மை என்பதையே பற்றுகோலாகக் கொண்டு துது விடுகிறாள்", என்பார்.

வ்யாக்யானம் – "'புஞ்ஜாநாமாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ ஸமாத்வாதஶத்ராஹம்' என்கிறபடியே பன்னிரண்டாண்டு தண்ணீர்த் துரும்பறக் கலந்து பிரிந்த பிராட்டியைப்போலே, அங்கே புக்கு நெடுங்காலம் அவனையநுபவித்துப் பிரிந்து தூது விடுகிறாள்", என்று பிள்ளான். "புறப்பட்டவள் முடியப் போகமாட்டாதே நகரோபவநத்திலே கிடந்து தூது விடுகிறாள்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி. "ஜீவந்தீம் மாம் யதா ராமஸ் ஸம்பாவயதி கீர்த்திமாந்" பரபரிபவம் பொறாத குடிப்பிறப்புடையவரிறே. அதிலே தமக்கு வந்த அவத்யம் பரிஹரிக்கச் சொல்லவேண்டாவே. கடலையணை செய்து ராவணாதிகளை நிரஸித்துத் தாம் வரக் கொள்ள, இத்தலை வெறுந்தறையாய்க் கிடவாமே செய்ய நினைத்தாராகில் ஏற்கவே பரிஹரித்துத் தம் புகழை நோக்கிக் கொள்ளச் சொல்லென்று சொன்னாளிறே; அப்படியே இவளும் தன் தசையை அறிவித்து விடுகிறாளாயிருக்கிறது.

விளக்கம் - ஸுந்தரகாண்டம் (31-18) - புஞ்ஜாநாமாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ ஸமாத்வாதஶத்ராஹம் - இராமனுடைய மாளிகையில் அனைத்தையும் கொண்டிருந்தவளாக, தேவ இன்பங்களைப் பன்னிரண்டு ஆண்டுகள் அனுபவித்த நான் - என்று கூறுதற்கு ஏற்ப, பன்னிரண்டு ஆண்டுகள் தண்ணீர் துரும்பு இல்லாமல் கலந்து பிரிந்த ஸீதையைப் போன்று, திருக்கோளூர் புகுந்து அங்கு நெடுங்காலம் அனுபவித்துப் பின்னர் பிரிந்த காரணத்தால் தூது விடுகிறாள் என்று பிள்ளான் கூறுவார். "அங்கிருந்து புறப்பட்ட இவள், முழுவதுமாகத் திரும்ப இயலாமல், அடுத்த வனத்தில் கிடந்து தூது விடுகிறாள்", என்று பட்டர் கூறுவார். இந்தக் கருத்து முன்பே கூறப்பட்டபோதிலும், இங்கு மீண்டும் ஏன் கூறப்பட்டது

என்றால், பிள்ளான் கருத்தை காட்டிலும் பட்டரின் கருத்திற்கு உள்ள ஏற்றத்தைக் கூறவே ஆகும். தனது காதலனுடைய பெருமை மிக்க அருள் ஒன்றையே பற்றுகோலாகக் கொண்டு தூது விடுத்தவர்கள் உள்ளனரோ என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; ஸுந்தரகாண்டம் (39-10) – ஜீவந்தீம் மாம் யதா ராமஸ் ஸம்பாவயதி கீர்த்திமாந் – கீர்த்தி கொண்ட இராமன், நான் பிழைத்துள்ளதாக எவ்விதம் தெளிவாரோ அந்த விதத்தில் உம்மால் கூறபப்ட்ட சொற்கள் இருக்க வேண்டும் - என்பதற்கு ஏற்ப, மற்றவர்கள் இழுக்கைப் பொறுத்துக் கொள்ள இயலாத குலத்தில் பிறந்தவர் அல்லவோ? அதிலும், தனக்கு வந்து துன்பத்தை நீங்குவதற்கு இராவணன் போன்றவர்களை அழித்து, தாம் வரும் வரை, நான் வெறும் தரையில் கிடக்கக்கூடாது என்று எண்ணுபவர் என்றால், முன்பாகவே வந்து என்னை இங்கிருந்து காப்பாற்றிச் சென்று தனது புகழை நிலை நாட்டிக் கொள்ளும்படிக் கூறுவாயாக என்று ஸீதை அனுமனிடம் கூறினாள் அல்லவோ? இது போன்று இவளும் தனது நிலையை உணர்த்துகிறாள்.

6-8-1 பொன் உலகு ஆளீரோ புவனி முழுது ஆளீரோ
நல் நலப் புள்ளினங்காள் வினையாட்டியேன் நான் இரந்தேன்
முன் உலகங்கள் எல்லாம் படைத்த முகில் வண்ணன் கண்ணன்
என் நலம் கொண்ட பிரான் தனக்கு என் நிலைமை உரைத்தே

பொருள் – உங்களிடம் வேண்டி நிற்பவர்களுடைய செயல்களைச் செய்வதற்குக் காரணமாக உள்ளதான மேன்மையான சிநேகம் போன்றவற்றைக் கொண்ட பறவைகளே! அவனைப் பிரிந்து இப்போது தூது விடும்படியாக உள்ள நிலைக்குக் காரணமான பாபங்கள் உள்ள நான், அவன் விஷயத்தில், அவனுடைய அடியார்கள் செய்யும் ப்ரார்த்தனையை நான் உங்களிடம் செய்கிறேன். எதற்காக என்றால், முன்பு அனைத்து லோகங்களையும் ஸ்ருஷ்டித்து, இவ்விதம் படைக்கப்பட்ட லோகங்களுக்குக் காவலாக, மழைக்கால மேகம் போன்ற திருமேனி கொண்டவனாக, அடியார்களுக்கு சுலபமாக, இப்படிப்பட்ட பலவிதமான காரணங்கள் மூலம் எனது மேன்மை உள்ளிட்ட அனைத்தையும் தன் வசமாக்கிக் கொண்ட உபகாரகனுக்கு, எனது நிலையை எடுத்துரைத்து, அதன் விளைவாகச் சேர்ந்தபடி உள்ள நாங்கள் இருவரும் உங்களுக்குப் பரிசாக அளிக்கும் பரமபதம் உள்ளிட்ட அனைத்து லோகங்களையும் நீங்கள் ஆள்வீர்களாக.

அவதாரிகை - சில புள்ளினங்களைக் குறித்து, எம்பெருமானுக்கு என் தசையை அறிவித்து விபூதி த்வயத்தையும் நான் தர நீங்கள் ஆளவேணுமென்று இரக்கிறாள்.

விளக்கம் – ஒரு சில பறவைகளை நோக்கி, "ஸர்வேச்வரனுக்கு எனது நிலையை உணர்த்தி, அதன் காரணமாக நான் உங்களுக்கு இரண்டு விபூதிகளையும் அளிக்க, அவற்றை நீங்கள் ஆளவேண்டும்", என்று வேண்டுகிறாள்.

வ்யாக்யானம் - (பொன்னுலகாளீரோ) ஈச்வர விபூதியானது விச்லேஷ தசையில் அவனையும் தன்னையும் சேர்த்தார்க்குப் பரிசிலாகக் கண்டதென்றிருக்கிறாள். உபய விபூதியும் ஒரு மிதுநத்துக்கு சேஷமிறே. அவ்வவஸ்தை பிறந்தால் சொல்லலாமிறே. ஸர்வேச்வரனிருக்க இவ்விடம் அராஜகமாய்க் கிடக்கிறதென்றிருக்கிறாள். ப்ரக்ருதி ஸம்பந்தமற்று ஒரு தேச விசேஷத்திலே போய் அநுபவிக்குமத்தை இங்கேயிருந்தே கொடுக்கிறாள். ப்ரக்ருதியோடே கொடுப்பாரும் ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அறுத்துக் கொடுப்பாருமாய் இருக்கிறபடி. ஒருவரையொருவர் பிரிந்து துழாவுகிற ஸமயத்திலே கொடுக்கை இருவர்க்கு ஒக்கும். சேர்க்கைக்காக உடம்பிழப்பாரும் உடம்போடே கூடி நின்று சேர விடுவாருமாயாகாதே இவர்களிருப்பது.

விளக்கம் - (பொன்னுலகாளீரோ) – ஸர்வேச்வரனுடைய உடைமையான விபூதிகளைப் பரிசாக அளிப்பதற்கு இவளுக்கு உரிமை உள்ளதோ என்பதற்கு மூன்று விடைகள் கூறுகிறார். "ஈச்வர" என்று தொடங்கி முதல் பதில், "உபய" என்று தொடங்கி இரண்டாவது, "அபிமதனைப் பிரிந்து" என்று தொடங்கி மூன்றாவது என்று கூறுகிறார். ஈச்வானுடைய விபூதியானது, அவனுடன் சேர்ந்துள்ள நேரத்தில், அவனையும் தன்னையும் சேர்த்து வைத்தவர்களுக்கு ஒரு உபகாரம் என்று எண்ணுகிறாள். இரண்டு விபூதிகளும் இந்த ஒரு ஜோடிக்கு அடிமை அல்லவோ? ஆனால், இரண்டு விபூதிகளும் ஸர்வேச்வரன் மற்றும் பெரியபிராட்டியார் என்ற ஜோடிக்கு வசப்பட்டது என்றால், பெரியபிராட்டியார் அவற்றை அளிக்கலாம் அல்லாமல், ஆழ்வாரால் அளிக்க இயலுமோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; பிராட்டி நிலையை ஆழ்வார் அடைந்ததால் அவ்விதம் அளிக்க இயலும். ஸர்வேச்வரன் இங்கு வந்து விட்டதால், அந்த இடம் அரசன் இல்லாத இடமாக உள்ளதால் இவ்விதம் கூறுகிறாள். இந்த ப்ரக்ருதியின் ஸம்பந்தம் நீங்கிய பின்னர் ஒரு சிறப்பான இடத்தில் சென்று அனுபவிக்கத்தக்க அனைத்தையும், இங்கு உள்ளபோதே அனுபவிக்கலாம்படி இந்தப் பறவைகளுக்கு

அளிக்கிறாள். இவள் இவ்விதம் பறவைகளுக்கு அளித்தது போன்று, இராமனும் ஜடாயுவிற்கு அளித்ததைக் கூறுகிறார்; இதன் மூலம் இராமனுக்கும் இவளுக்கும் உள்ள வேறுபாடு கூறுகிறார்; அதாவது இந்தச் சரீரம் உள்ளபோதே அனுபவிக்கும்படியாக அளிக்கும் ஆழ்வாரும், இத்தகைய சரீர ஸம்பந்தம் என்பதை விலக்கிக் கொடுக்கவல்ல ஸர்வேச்வரனும் என்று இவர்கள் உள்ளனர். ஒருவர் சரீர ஸம்பந்தம் உள்ளபோதே அளிக்கிறார், மற்றொருவர் நீங்கிய பின்னரே அளிக்கிறார் என்பதான வேறுபாடு உள்ளது. இது போன்று அளிக்கின்ற காலத்தில் வேறுபாடும் உள்ளதோ என்பதற்கு விடை அளிக்கிறார்; ஒருவரை ஒருவர் பிரிந்து நின்று தடுமாறியபடி உள்ளபோது "கொடுத்தல்" என்பது இருவருக்கும் ஒரே போன்று உள்ளதாக இருக்கிறது. இவர்கள் இவ்விதம் தருவதற்கு காரணம் என்ன? ஜடாயுவைத் தன்னுடன் சேர்ப்பதற்காக, சரீரத்தை இழந்தபடி இருந்ததால், அதனை நீக்கிக் கொடுத்தான்; இங்கு இந்த பறவைகள், இவள் சரீரத்துடன் உள்ளபோது அவனுடன் சேரும்படிச் செய்வதற்காக, இவள் கொடுக்கிறாள்; ஆக இவர்கள் சேர்வதற்காக உடல் இழப்பவர்களாகவும், சரீரத்துடன் உள்ளபோது சேரும்படிச் செய்வதாகவும் அல்லவோ இந்த ஜடாயுவும் பறவைகளும் முறையே உள்ளன.

வ்யாக்யானம் – (பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ) உங்கள் விபூதியும் நான் பட்டது படவேணுமோ? அபிமதனைப் பிரிந்து கடகரைத் தேடித் திரிகிற இவள், கடிப்பிப்பார்க்கு உபய விபூதியையும் கொடுக்கிறாளிறே, அவனை நினைத்திருந்த கனம். கலந்தபோது தன்னையும் தன்னுடைமையையும் இவளுக்காகப் பிரிந்தபோது மாறுவானொரு புல்லியனோடன்றே இவள் கலந்தது. தன் அஸந்நிதியிலும் இவள்தான் இப்படி உபய விபூதியையும் இஷ்ட விநியோகார்ஹமாக்கும்படியிறே, அவன் தன்னையும் தன்னுடைமையையும் இவளுக்கு ஆக்கி வைத்தபடி.

விளக்கம் – (பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ) - உங்களுடைய விபூதியும் நான் அடைந்த பிரிவாற்றாமை துன்பங்களை அடையவேண்டுமா? அடுத்து, ஈச்வரனுக்குச் சொந்தமான விபூதியைச் அளிப்பதற்கு இவளுக்கு என்ன உரிமை உள்ளது என்பதற்கான மூன்றாவது சமாதானம் கூறுகிறார்; காதலனைப் பிரிந்து அவனுடன் தன்னைச் சேர்ப்பவர்கள் யார் என்று தேடியபடி உள்ள தன்னை, அவனுடன் சேர்த்து வைப்பவர்களுக்கு இரண்டு விபூதிகளையும் தருகிறாள்

அல்லவோ? இது அவனை நினைத்தபடி உள்ள கனம் காரணமாக ஆகும்; அதாவது அவனுடன் கலந்தபோது தன்னையும் தனது உடைமையையும் அவனுக்கு அளித்தமை குறித்து எண்ணியதால் ஏற்பட்ட மனக்கனம் ஆகும். ஆனால் கலந்தபோது ஏதோ பேசியதைக் கேட்டு இவள் அனைத்தையும் தரலாமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; கலந்துபோது தன்னையும் தனது உடைமைகளையும் இவளுக்கு என்று அளித்தவன், பிரிந்தபோது மாறும்படி உள்ள ஒரு தாழ்ந்தவனுடன் இவள் கலக்கவில்லை அல்லவோ? ஆயினும் இவள் தரும்போது அவன் அருகில் இருக்கவேண்டாமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; தான் இவள் அருகில் இல்லாத நேரத்தில் கூட, இவள் ஈச்வரனாகிய தன்னுடைய உபய விபூதிகளை, இவ்விதம் இவளுடைய இஷ்டப்படி அளிக்கலாம் என்பதாக அல்லவோ அவன் தன்னையும் தனது உடைமைகளையும் இவளுக்கு என்று தந்தான்?

வ்யாக்யானம் - அருளாளப் பெருமாளெம்பெருமானார் நோவிலே, பிள்ளையுறங்கா வில்லிதாஸரைக் கொண்டு ஆழ்வான் புக, “ஆழ்வான் பண்ணின நெஞ்சாறல் ஆறுவது ஆளவந்தார் ஸ்ரீபாதத்தேறப் போனாலிறே” என்ற வார்த்தையை நினைப்பது. (பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ) ஒரு வில்லெருதுகளோபாதி உபய விபூதியும் தன்னைச் சேர்ப்பார்க்கென்றிருக்கிறாள். அதாவது, வில்லெருதுகளை நிரஸிக்கை அவர்களுடைய ஸம்ச்லேஷத்துக்கு ஹேதுவானாற்போலே, இவை உபயவிபூதியும் ஆளுகை அவனுடன் ஸம்ச்லேஷத்துக்கே ஹேதுவென்றாள் என்றபடி. (ஆளீரோ) ஸ்வத்வம் ஒருவர் பண்ணிக் கொடுக்கவேண்டாதிருக்கிறபடி. “தத் தமஸ்யாபயம் மயா” என்றாரிறே பெருமாள்; அப்படியே அவற்றுக்கும் “தூது போக” என்று முகங் காட்டினபோதே கொடுத்தற்றது. அவன் கார்யஞ் செய்கிற இவற்றுக்கு அவனை யறிவித்துக் கொடுக்கவேண்டாவிறே. இவள் தானும் அவன் கார்யமிறே செய்கிறது. இவை தூது போகவே தான் உளளாம்; தான் உள்ளாகவே ஸவிபூதிகனான எம்பெருமானுளனாம். இனி, இவள் தன் படுக்கைப் பற்றிறே கொடுக்கிறதும்.

விளக்கம் – தன்னையும் தனது உடைமைகளையும் இவள் தனது விருப்பத்தின்படி அளிக்கலாம் என்னும் அளவிற்கு அவன் இவள் வசப்பட்டு நிற்பதால், இவள் இவ்விதம் அளிக்கலாம் என்பதை ஓர் நிகழ்வின் மூலம் விளக்குகிறார். அருளாளப்பெருமாளெம் பெருமானார் தனது உடல்நிலை சரியின்றி கிடந்தபோது அவரைக் காண்பதற்கு ஸ்வாமி கூரத்தாழ்வான், பிள்ளையுறங்கா

வில்லிதாஸருடன் சென்றார். அப்போது அருளாளப் பெருமாள் எம்பெருமானார், “எனக்குப் பரமபதத்தை அளிக்கும் வல்லமை ஆழ்வானிடம் உள்ளபோதிலும், எனக்கு அவர் அதனை அளிக்காமல் உள்ளதால் எல்லவோ எனக்கு இந்த நோய் தொடர்கிறது? இதனால் வருத்தமும் உண்டாகிறது. இது தீரவேண்டும் என்றால், ஆழ்வான் எனக்குப் பரமபதத்தை அளித்து, நான் ஸ்ரீஆளவந்தாருடைய திருவடிகளில் சேரவேண்டும்”, என்றார். (பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ) - ஒரு வில்லும் எருதுகளும் முறையே ஸீதைக்கும் நப்பின்னைக்கும் பண முடிப்பு போன்று பரிசாக உள்ளது போன்று, தன்னை அவனுடன் சேர்ப்பவர்களுக்கு இந்த இரண்டு விபூதிகளும் உண்டு என்கிறாள். (ஆளீரோ) – “இவ்விதம் நீ எங்களுக்குத் தந்தாயோ” என்று பறவைகள் கேட்பதற்கு விடை அளிக்கிறார். தனது உடைமையை வேறு ஒருவர் தனக்கு அளிக்கவேண்டாம் அல்லவோ? இதன் காரணம் என்ன என்பதற்கு விடை கூறுகிறார்; யுத்தகாண்டம் (18-34) - தத் தமஸ்யாபயம் மயா - என்னால் இவனுக்கு அபயம் அளிக்கப்பட்டது – என்று இராமன் கூறினான் அல்லவோ? இது போன்று இந்தப் பறவைகளுக்கு “தூது போக” என்று தனது முகத்தைக் காண்பித்தபோதே, அனைத்தையும் கொடுத்தாள் என்றாகிறது. இரண்டு விபூதிகளும் இருவருக்கும் சொந்தம் என்றுள்ளபோது, அவன் அறியாமல் அவற்றை அளிக்கலாமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; அவனைக் குறித்த செயல் செய்வதற்காக வந்த இவற்றுக்கு, அவனிடம் கூறிய பின்னர் மட்டுமே பரிசு தரவேண்டும் என்பது இல்லை. ஆயினும், தனது கார்யமாக அல்லவோ இவற்றைத் தூது விடுகிறாள் என்று கேட்கலாம்; அப்படி அல்ல; இவளும் இந்தத் தூது என்பதை அவன் கார்யமாகவே செய்கிறாள் என்று கருத்து. எப்படி என்றால் , இவை தூது செல்வதால் மட்டுமே, தான் “உள்ள ஒரு வஸ்து” என்றாகிறாள். தான் “உள்ள ஒரு வஸ்து” என்று இவள் இருப்பதால் மட்டுமே இந்த ஜகத்துடன் கூடிய ஸர்வேச்வரனும் “உள்ளான்” என்றாகிறான். ஆயினும் அவன் அறியாமல் தரலாமா என்றால், இவள் தனது தாய் வீட்டு சீதனத்தை அல்லவோ அளிக்கிறாள்!

வ்யாக்யானம் - (ஆளீரோ) உங்கள் கார்யமே செய்யவொண்ணாது; என் கார்யமுஞ் செய்யவேணும். இவள் கார்யஞ் செய்கையாவது, இவற்றையாளுகையிறே. “இவள்தான் உபயவிபூதியையும் கொடாநின்றாளாகில், அவன் வந்தால் தானும் அவனும் எங்கேயிருப்பது?” என்ன, “இக்குருவி காட்டினவிடத்தே” என்று

அநந்தாழ்வான் வார்த்தை. (பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ) கைப்பட்டத்தைக் கொடுத்திறே மற்றொன்று தேடிக் கொடுப்பது. தனக்காக்கின அடைவே கொடுக்கிறாள், நித்யவிபூதியைக் கொடுத்திறே லீலாவிபூதியைக் கொடுத்தது; “அயர்வறுமமரர்களதிபதி” என்ற பின்பிறே, “இலனதுடையனிது” என்று, லீலாவிபூதி யோகஞ் சொல்லிற்று. இங்கேயிருந்தாலும் ஜ்ஞானம் பிறந்தால் அணித்தாய்த் தோற்றுவது அவ்விடமிறே; “அக்கரையென்னு மனத்தக் கடலுளழுந்தி யுன்பேரருளாலிக்கரையேறி யிளைத்து” என்று, அது இக்கரையாகயும், இது அக்கரையாகவும் சொல்லா நின்றார்களிறே. “மாக வைகுந்தங் காண்பதற்கென் மனமேகமெண்ணும்” என்றிறேயிருப்பது. ப்ராப்தி தசையிலும் முற்பட்டிருப்பது அவ்விடமேயிறே; ததீயத்வாகாரத்தாலே யொருகால் உத்தேச்யமாமதிறே இவ்விடம். “நோபஜநம் ஸ்மரந்நிதம் சரீரம்” என்னா நிற்கச் செய்தேயும், அவனுடைய ஐச்வர்யத்திற் குறையநுபவிக்க வொண்ணாதென்று ததீயத்வாகாரேண ஒருகால் உபாதேய ப்ரதிபத்தி உண்டித்தனையிறே. இல்லையாகில், “புவனி முழுதாளீரோ” என்று, ஆகாராந்தர ப்ரதிபத்தியுண்டாகில் கட்டடங்க உத்தேச்யமாய்த் தோற்றாதிறே.

விளக்கம் – (ஆளீரோ) - உங்கள் கார்யம் மட்டுமே செய்தலாகாது, எனது கார்யத்தையும் செய்யவேண்டும். இவள் கார்யம் செய்தல் என்பது இரண்டு விபூதிகளையும் ஆள்வது அல்லவோ? “இவள் இரண்டு விபூதிகளையும் இவற்றுக்கு அளித்த பின்னர், அவன் வந்தால், அவனும் இவளுமாக எங்கு இருப்பர்?”, என்பதற்கு விடையாக அநந்தாழ்வான், “இந்தக் குருவி காண்பித்த இடத்தில் இருப்பர்”, என்பார். (பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ) - முதலில் தான் உள்ள இந்த உலகத்தை அளிக்காமல், “பொன் உலகு ஆளீரோ” என்று அந்த விபூதியை ஏன் ஏன் முதலில் தரவேண்டும் என்பதற்கு “கை பட்டதை” என்று தொடங்கி விடை அளிக்கிறார். தனக்கு முன்பே கைக்கு எட்டியதை முதலில் அளித்த பின்னர் அல்லவோ மற்றவற்றைத் தேடித் தரவேண்டும்! தனக்கு வந்த முறையிலேயே தருகிறாள். தனக்கு வந்த முறை என்ன என்பதற்கு விடை தருகிறார்; நித்ய விபூதியை கொடுத்து, அதன் பின்னர் அல்லவோ லீலாவிபூதியைக் கொடுத்தாள்! இவ்விதம் அளிப்பதற்கு ப்ரமாணம் திருவாய்மொழி (1-1-1) - அயர்வறுமமரர்களதிபதி - என்பதற்கு பின்பு அல்லவோ திருவாய்மொழி (1-1-3) - இலனதுடையனிது - என்று லீலா விபூதியைக் கூறுகிறார்? இங்கு இருந்தாலும், ஞானம் பிறந்தவுடன் அருகாமையில் உள்ளதாக அல்லவோ பரமபதம்

தோன்றுகிறது? இவ்விதம் பரமபதம் அருகாமையில் உள்ளதாகத் தோன்றுவதற்கான ப்ரமாணம் பெரியாழ்வார் திருமொழி (5-3-7) - அக்கரையென்னு மனத்தக் கடலுளழுந்தி யுன்பேரருளாலிக்கரையேறி யிளைத்து – என்பதற்கு ஏற்ப, பரமபதத்தை அக்கரையாகவும், இந்த உலகை இக்கரையாகவும் கூறுனர். இவ்விதம் பரமபதம் அருகில் உள்ளதாகத் தோன்றும் காரணத்தை அருளிச்செய்கிறார்; திருவாய்மொழி (9-3-7) - மாக வைகுந்தங் காண்பதற்கென் மனமேகமெண்ணும் – என்பது காண்க. அதாவது அடையவேண்டிய இடமாக, விரைந்து அடையவேண்டும் என்று வேகத்துடன் எப்போதும் உள்ளதால், அந்த இடம் அருகில் உள்ளதாகத் தோன்றுகிறது. அடைய உள்ள நிலையில் கூட இந்த இடமே முதன்மையாக உள்ளது. ஆனால் அந்த நிலையில் பரமபதம் அல்லவோ முதன்மையாக இருக்கும் என்பதற்கு விடை அளிக்கிறார்; அவனுடைய உடைமை என்ற தன்மையாலும், ஒருமுறை இந்த லீலாவிபூதியில் முதன்மை உள்ளது. “ஒருமுறை” என்று ஏன் கூறவேண்டும், “எப்போதும்” என்று கூறலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; அதாவது சாந்தோக்யம் (8-12-3) - நோபஜநம் ஸ்மரந்நிதம் சரீரம் – தனது சரீரத்தை முக்தாத்மா எண்ணுவதில்லை - என்பதாக உள்ளபோதிலும், “அவனுடைய ஐச்வர்யத்தில் எந்தவிதமான குறையையும் அனுபவிக்க முடியாது” என்றுள்ள அவனுடைய உடைமையின் தன்மை காரணமாக, இந்த லீலாவிபூதியானது ஒருமுறை பற்றத்தக்கது என்று எண்ணம் உண்டு என்று கருத்து. ஆனால், அவனுடைய உடைமை என்பதால் மட்டுமே இலக்காக உள்ளதோ, இயல்பாகவே இந்தத் தன்மை இல்லையோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இவ்விதம் இல்லை என்றால், வேறு ஒரு விதத்தில் “அந்த இடத்தை இலக்காக அடையவேண்டும்” என்ற எண்ணம் உண்டாகி இருந்தால், “புவனி முழுதாளீரோ” என்று முழுவதுமாக இலக்காகக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் தோன்றாது அல்லவோ?

வ்யாக்யானம் - (பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ) அடிமைக்கு அடைத்தேற்றலாயிறே இவ்விடந்தானிருப்பது; அவ்விடம் அடிமையாலல்லது செல்லாதவிடமாயிறே இருப்பது. தூது போனாரது பரமபதம், அதுடையாரது லீலாவிபூதி. (புவனி முழுதாளீரோ) உத்தேச்யமான நித்யவிபூதியைக் கொடுத்தவள், த்யாஜ்யமான லீலாவிபூதியைக் கொடுப்பானென்? என்னில், இவை பண்ணுகிற உபகாரத்தை நினைத்து, “இன்னது கொடுப்போம்” என்றறியாமல் கலங்கி. பண்டு கலங்கினாரும் இப்படியே செய்தார்கள்; “அபராவர்த்திநாம் யாச

யாச பூமி ப்ரதாயிநாம்" என்று சொன்னார்கள். ப்ரீதி அளவுபட்டிருக்கிலிறே தெளிந்திருப்பது. "ஹிரண்யம் வா ஸுவர்ணம் வா ரத்நாநி விவிதாநி வா | ராஜ்யம் வா த்ரிஷு லோகேஷு நைததர்ஹதி பாஷிதம்" என்று கலங்கினாளிறே. இருவரும் கொடுக்கலாம்படி ஒரு மிதுநத்துக்கு சேஷமாயிறே உபயவிபூதியுமிருப்பது.

விளக்கம் - (பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ) - தனது அடியவனாக உள்ள ஒருவனை அவனுடைய மேட்டுமடையான தன்மை மற்றும் அவன் தன்னை அடையவிடாமல் தடுக்கும் விரோதிகள் போன்ற பலவற்றையு விலக்கி அல்லவோ மேலே உயர்த்த வேண்டும்படியாக இந்த உலகம் உள்ளது? ஆனால் பரமபதமோ, அடிமையாக இருப்பவர் அல்லாமல் வேறு யாரும் செல்லாதபடி உள்ளது. தூது சென்றவனுடைய இடம் பரமபதம், அத்தகைய செயலைக் கொள்பவரது இடம் லீலா விபூதி என உள்ளன. (புவனி முழுதாளீரோ) – அடையவேண்டிய இலக்காக உள்ள பரமபதத்தை அளிப்பவன், கைவிடத்தக்கதாக உள்ள லீலாவிபூதியை ஏன் தரவேண்டும் என்பதற்குக் காரணம் அருளிச்செய்கிறார்; இவை தனக்குச் செய்கிற உபகாரத்தை எண்ணியே ஆகும். அதாவது அவனுக்கு இன்னது கொடுப்போம் என்று அறியாமல் தடுமாறி நிற்பவர்கள். இவ்விதம் தடுமாறி அளித்தவர்கள் யாரேனும் உள்ளனரா என்பதற்கு விடை அளிக்கிறார்; இதற்கு இரண்டு உதாரணங்கள் கூறுகிறார்; முன்பு கலங்கியவர்கள் இது போன்று செய்தார்கள்; மேலும் ஆரண்யகாண்டம் (68-29,30) – அபராவர்த்திநாம் யாச யாச பூமி ப்ரதாயிநாம் - திரும்புதல் இல்லாதவர்களுக்கும், பூமி தானம் செய்தவர்களுக்கும் எத்தகைய மேலான கதி உள்ளதோ - என்றும் கூறினார்கள். இவ்விதம் இவர்கள் தடுமாறக் காரணம் என்ன? ப்ரீதியானது ஒரு அளவு கொண்டதாக இருந்தால் அல்லவோ தெளிவுடன் இருக்கமுடியும்? இவ்விதம் அளவுபடாமல் இருப்பதால் நிகழ்வது என்ன என்பதை அடுத்துக் கூறுகிறார். யுத்தகாண்டம் (116-20) - ஹிரண்யம் வா ஸுவர்ணம் வா ரத்நாநி விவிதாநி வா | ராஜ்யம் வா த்ரிஷு லோகேஷு நைததர்ஹதி பாஷிதம் - இராவணனை அழித்த பின்னர் ஹனுமானை நோக்கி சீதை கூறுவது, "வெள்ளி, தங்கம், இரத்தினம், மூன்று லோகங்களில் உள்ள ராஜ்யங்கள், இது போன்று அனைத்தும் கூட நீ கூறிய இனிய சொற்களுக்குத் தகுந்தவை அல்ல" - என்பதாகும்; இப்படி உரைத்துக் கலங்கினாள் அல்லவோ? ஆனால் மூன்று லோகங்களையும் அளிப்பதற்கு அவளுக்கு உரிமை உள்ளதா என்றால், இருவரும் அனுபவிக்கலாம்படி ஒரு ஜோடிக்கு அடிமையாக

அல்லவோ நித்யவிபூதியும் லீலாவிபூதியும் உள்ளன? இங்கு "இருவரும்" என்றது இராமனையும் ஸீதையையும் ஆகும்.

வ்யாக்யானம் - (நன்னலப் புள்ளினங்காள்) அவனிலும் உங்களுக்குண்டான நீர்மையில் ஏற்றமிருந்தபடியென்? இவ்வளவில் ஆளிட்டழைக்கும்படி கடக்கவிராதே, நீங்கள். முன்னம் கிட்ட நின்று முகங் காட்டப் பெறுவதே! உங்கள்படி யிருந்தபடி கண்டேனுக்கு, ஸர்வஸ்வத்தையும் எனக்குத் தந்து தூது போம்படியாயிருந்ததீ! "அவனுக்குக் குணங்களிலேற்றம் ஆச்ரயத்தாலே" என்றிருந்தோம்; அது உங்கள் பக்கலிலேயாகாதே என்கிறாள். உங்கள் நீர்மையறியாதே, என் செல்லாமையாலே "அத்தைக்கொள், இத்தைக்கொள்" என்று நலிந்தேனிறே! "குணாஸ்த்வய்யேவ சோபநா:" என்னுமவனும் புறம்பானான், உங்களைப் பார்க்க. "உங்கள் தரத்துக்கு அது ஓரறுகும் தாளிப்பூவுமிறே" என்பராம் பிள்ளையமுதனார். உங்களுக்கு நான் சில செய்தேனே! வெறும் உங்கள் நீர்மையாலே செய்தததத்தனையிறே. பாண்டவர்களுக்குத் தூது போன க்ருஷ்ணனையும், ஆளவந்தார்க்குப் பச்சையிட்ட மணக்கால்நம்பியையும் போலே இருந்ததீ யுங்கள்படி! (நன்னலப் புள்ளினங்காள்) அழகிய நீர்மையையுடைய புள்ளினங்காள் என்னுதல், மிக்க ஸ்நேஹத்தையுடைய புள்ளினங்காள் என்னுதல்.

விளக்கம் - (நன்னலப் புள்ளினங்காள்) - இங்கு "நல் + நலம்" என்று பிரிக்கவேண்டும். இங்குள்ள நலம் என்பதற்கு க்ருபை, கொடை, குணங்களின் தொகுப்பு, ஸ்நேகம் என்பதாக நான்கு பொருள்களைக் கொள்கிறார். "நல்" என்ற அடைமொழி மூலம் "க்ருபை" என்ற பொருளில், ஸர்வேச்வரனுடைய க்ருபையையும் இந்தப் பறவைகளுடைய க்ருபையையும் பிரிக்கிறார்; அவனைக் காட்டிலும் உங்களுடைய நீர்மைத்தன்மையில் ஏற்றம் உள்ளதே, இது எப்படி? இதற்கு அந்தப் பறவைகள், "அவனைக் காட்டிலும் எங்கள் க்ருபைக்கு ஏற்றம் எப்படி?" என்று கேட்டதற்கு விடை தருகிறாள்; லக்ஷ்மணன் மூலமாக ஸுக்ரீவனை அழைத்தது போன்று, யாரையேனும் அனுப்பி உங்களை அழைக்கும்படி நீங்கள் இராமல், நீங்களாகவே முதலில் வந்து உங்கள் முகத்தைக் காண்பிக்கும்படி உங்கள் தன்மை உள்ளதே! அடுத்து "நலம்" என்பதற்கு "கொடை" என்பதாகப் பொருள் கொண்டு கூறுகிறார்; உங்களுடைய தன்மையை உள்ளது உள்ளபடி கண்ட எனக்கு உங்களுடைய அனைத்தையும் என்னிடம் தந்து தூது செல்லும்படி உள்ளீர்களே! அடுத்து "நலம்" என்பதற்கு "குணங்களின் தொகுப்பு"

என்பதாகப் பொருள் கொண்டு, “நல்” என்பதன் மூலம் ஸர்வேச்வரனுடைய குணங்களையும், திருவடியின் குணங்களையும் வேறுபடுத்துகிறார், “அவனுடைய குணங்களுக்கு ஏற்றம் என்ற நிலையானது, அவன் அண்டும்படி உள்ளதால் ஆகும்” என்று நான் இருந்தேன்; ஆனால் இத்தகைய நிலை உங்களிடம் அல்லவோ உள்ளது! உங்களுடைய நீர்மைத்தன்மையை அறியாமல், எனது புத்திக் குறைவு காரணமாக உங்களிடம், “இதனை ஏற்பாய், அதனை ஏற்பாய்” என்று நலிந்தேன் அல்லவோ? யுத்தகாண்டம் (116-28) - குணாஸ்த்வய்யேவ சோபநா: - இராவண வதத்தின் பின்னர் ஸீதை அனுமனிடம், “பல குணங்களும் உன்னிடம் அல்லவோ விளங்குகின்றன”, என்றாள். இதனை நோக்கும்போது, இவ்விதம் உள்ள அனுமனும் கூட உங்களை நோக்கும்போது குறைந்தவனே ஆகிறான். பிள்ளை அமுதனார், “இவள் அந்தப் பறவைகளிடம், ‘உங்களுக்கு நான் அளித்தவை அருகம்புல் மற்றும் தாளிப்பூ போன்றதே ஆகும்’ என்கிறாள்”, என்பார். உங்களுக்கு நான் ஏதும் செய்தேனோ, அவை உங்கள் நீர்மையால் மட்டுமே நிகழ்ந்தது அல்லவோ? அடுத்து “நலம்” என்பதற்கு “ஸ்நேஹம்” என்று பொருள் கொள்கிறார். பாண்டவர்களுக்குத் தூது சென்ற க்ருஷ்ணன் மற்றும் ஆளவந்தாரை மயக்குவதற்குத் தூதுவளை கொண்டு வந்த மணக்கால்நம்பி போன்று உங்கள் செய்கையும் உள்ளது. (நன்னலப் புள்ளினங்காள்) - அழகான நீர்மை கொண்ட பறவைகள் அல்லது மிகுந்த ஸ்நேஹம் கொண்ட பறவைகள் என்று பொருள்.

வ்யாக்யானம் – “இருவருமான சேர்த்தியொழிய வேறுமொன்றைத் தரவோ?” என்று சிரித்திருந்தன; “அர்த்ததஸ்சமயா ப்ராப்தா தேவராஜ்யா தமோ குணா: | ஹதசத்ரும் விஜயிநம் ராமம் பச்யாமி ஸுஸ்த்திதம்”; பெருமாள் விஜயிகளாய்க் கொண்டிருக்கப் பார்த்தவர்களுக்கு தேவராஜ்யாதி நன்மைகள் தன்னடையே வந்ததிறே. (நன்னலம்) “அஹஞ்ச ரகுவம்ச” இத்யாதி; “ந ஜீவேயம் க்ஷணமபி” என்றிருக்கிற நானும் என்னையொழிய ஜீவியாகபடியிருக்கிற பிள்ளை பரதனும், இருவர்க்கும் உஜ்ஜீவந ஹேதுவான பிள்ளையும். “வைதேஹ்யா:” இவையெல்லாம் தகுமென்கைக்காக. “தர்மத: பரி ரக்ஷிதா” நீ செய்ததுக்கொரு ப்ரத்யுபகாரம் பண்ணலாமோ? வெறும் அறவனாகையாலே செய்தாய் அத்தனை. “உனக்கென் செய்கேன்” என்று காலதத்வமுள்ளதனையும் உழைக்கும்படியிறே நீ செய்தது.

விளக்கம் – அந்தப் பறவைகள், “நீங்கள் இருவருமாக உள்ள சேர்த்தி அல்லாமல் வேறு ஒன்றைத் தருகிறாயா? அது வேண்டாம்”, என்று சிரித்தபடி நின்றன.

இப்படியாக இருவருடைய சேர்த்தி அல்லாமல் வேறு ஒன்றும் வேண்டாம் என்று இருந்தவர்கள் வேறு யாரும் உள்ளனரோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; யுத்தகாண்டம் (116-24) – அர்த்ததஸ்சமயா ப்ராப்தா தேவராஜ்யா தமோ குணா: | ஹதசத்ரும் விஜயிநம் ராமம் பச்யாமி ஸுஸ்த்திதம் - அனுமன் ஸீதையிடம், "பகைவர்களை அழித்தவரும், வெற்றி நிறைந்தவரும் ஆகிய இராமனை நான் பார்த்தபடி உள்ளேன் என்ற அந்தச் செயலால், தேவர்களுடைய ராஜ்யம் உள்ளிட்ட அனைத்து மேன்மைகளும் என்னால் அடையப்பட்டன", என்றான் - என்பது காண்க. இராமனை வெற்றி அடைந்தவனாகக் காண்பவர்களுக்கு, தேவ ராஜ்யம் போன்ற பலவும் தானாகவே வந்து சேர்ந்தன அல்லவோ? (நன்னலம்) – "நலம்" என்பதற்கு "க்ருபை" என்று பொருள் கொண்டு, இவ்விதம் கொண்டாடியவர்கள் உள்ளனரோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; இதற்கு யுத்தகாண்டம் (1-12) - அஹம் ச ரகுவம்சச்ச லக்ஷ்மணச்ச மஹாபல: வைதேஹ்யா தர்சநேநாத்ய தர்மத: பரிரக்ஷிதா: - (இராமன்கூறுதல்) வைதேகியை ஹனுமான் கண்டு வந்ததால், தர்ம வழியில் நிற்கும் நானும், ரகு வம்சமும், பெரும் வலிமை கொண்ட லக்ஷ்மணனும் காப்பாற்றப்பட்டோம் - என்ற ச்லோகத்தை வ்யாக்யானம் செய்கிறார், இராமன் அனுமானிடம் கூறுதல்: ஸுந்தர காண்டம் – "ந ஜீவேயம் க்ஷணமபி - ஒரு க்ஷணம் கூட சீதையைப் பிரிந்து நான் இருக்கமாட்டேன்" என்பதாக உள்ள நானும், என்னை நீங்கிஉயிர் பிழைக்க இயலாதபடி உள்ள எனது புத்திரனாகிய பரதனும், நானும் ஸீதையும் பிழைத்திருக்கக் காரணமாக உள்ள புத்திரனாகிய லக்ஷ்மணனும். (வைதேஹ்யா:) - இவை எல்லாம் தகும் என்பதற்காக, (தர்மத: பரிரக்ஷிதா) - நீ செய்த செயல்களுக்கு மறு உதவி செய்வது சரியோ? ஏதும் கருதாமல் அல்லவோ இவை அனைத்தையும் நீ செய்தாய். "உனக்கு நான் என்ன கைம்மாறு செய்தேன்" என்று காலதத்வம் உள்ளது முடிய நான் உழைக்கும்படி அல்லவோ நீ உதவிகள் செய்துள்ளாய் அனுமானே!

வ்யாக்யானம் - (புள்) இந்நீர்மையில் ஏற்றமுடைய உங்களுக்கே கமந ஸாதநமான பக்ஷபாதமுண்டாகப் பெறுவதே! "பிரிந்தாரைச் சேர்க்கை திர்யக்குக்களின் கார்யம்" என்றிருக்கிறாள், ராமாவதாரத்தில் வாஸநையாலே. (இனங்காள்) "ந கஸ்சிந்நாபராத்யதி" என்பாருங் கூடவுண்டாயிருக்கிறபடி. (இனங்காள்) உடலுமுயிருங்கூடக் கிடக்கப் பெறுவதே! "அக்ரதஸ்தே கமிஷ்யாமி" என்று முன் நடப்பாருங்கூட இருக்கப் பெற்றபடி. (இனங்காள்) "திக்ஷு ஸர்வாஸு மார்கந்தே" என்று, எல்லாத் திக்கிலும் போகவிடலாம்படி திரளவிருக்கிறபடியென்றும்.

விளக்கம் – (புள்) - இப்படிப்பட்ட நீர்மையில் ஏற்றம் நிறைந்த உங்களுக்குப் பறந்து செல்வதற்கு ஏற்ற திறனும் ஒரு தலைப்பக்ஷமாக உண்டாகி உள்ளதே! ஆனால் வாய் பேச இயலாத பறவைகளால், பிரிந்தவர்களைச் சேர்த்து வைக்க இயலுமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; பிரிந்தவர்களைச் சேர்ப்பதே விலங்குகள் மற்றும் பறவைகளின் செயல்பாடு ஆகும் என்றுள்ளாள்; இது இராமாவதாரத்தின் காரணமாக ஆகும். (இனங்காள்) - அடுத்து "இனம்" என்பதற்கு இருவர் என்றும், கூட்டம் என்றும் இரு பொருள்கள் கொள்கிறார். இவற்றில் முதலில் "இருவர்" என்பதாகப் பொருள் கொண்டு அருளிச் செய்கிறார்; அதாவது தனக்கும் புருஷகாரம் என்று கூறப்படும் ப்ரயோஜனம் உள்ளது என்றும், தன்னைப் போன்று பிரிந்திருக்காமல் பரஸ்பரம் சேர்ந்துள்ளன என்றும் கூறுகிறாள். யுத்தகாண்டம் (116-44) – ந கஸ்சிந்நாபராத்யதி - தவறு செய்யாதவர்கள் யாரும் இல்லை – என்று கூறுபவர்களுக்குக் கூட இறுதியில் சேர்க்கை கிட்டியது. (இனங்காள்) - அல்லது உயிரும் உடலும் சேர்ந்து உள்ளது அல்லவோ என்கிறாள். அயோத்யாகாண்டம் (27-9) - அக்ரதஸ்தே கமிஷ்யாமி - செல்வதற்கு அரிய கானகத்திற்கு உமக்கு முன்பாக நன் செல்வேன் என்று முன்னே நடப்பவர்களும் உள்ளனர்; இப்படியாகத் தன் மூலம் ப்ரயோஜனம் உள்ளதைக் கூறுகிறாள். அடுத்து "இனம்" என்பதற்கு "கூட்டம்" என்று பொருள் கொள்கிறார்; ஸுந்தரகாண்டம் (30-3) - திக்ஷு ஸர்வாஸு மார்கந்தே – அனைத்து திசைகளிலும் தேடியபடி உள்ளனர் - என்பதற்கு ஏற்ப, அனைத்து திசைகளுக்கும் செல்லும்படியாகக் கூறுவதற்கு ஏற்ப உள்ள பெரும் கூட்டம் என்று கருத்து.

வ்யாக்யானம் - (வினையாட்டியேன்) கைப்புகுந்தவனைக் கைகழியவிட்டு உங்கள் காலிலே விழும்படியான பாபத்தைப் பண்ணினேன். உங்களுக்குக் குணங்கள் ஸ்வரூபமானாற்போலேயிறே எனக்கு பாக்யஹாநி ஸ்வரூபமானபடி. (நான்) "தர்மத: பரிரக்ஷிதா:" என்றிருப்பான் அவன்கிடீர்! ஸ்ரீஜநகராஜன் திருமகளான வேண்டற் பாட்டோடேயாகாதேதான் தூது விடுகிறது இவள்! (நானிரந்தேன்) அத்தலை யித்தலையானபடி. (இரந்தேன்) கீழே, அவன் திருவடிகளிலே நாலு ப்ரயோகம் சரணம் புக்கார்; இப்போது ததீயர் பக்கலிலே ப்ரபத்தி பண்ணுகிறார்: அது தப்பிலும் இது தப்பாதிறே. இதுக்கு வேறு விலக்கடியில்லையே. "ப்ரார்தநா" மதியிறே சரணாகதியாகிறது. அவ்யபிசாரியான உபாயத்தைப் பற்றுகிறாள்.

விளக்கம் – (வினையாட்டியேன்) - என்னிடம் வந்து சேர்ந்தவனைப் போகவிட்டு, இப்போது உங்கள் கால்களில் விழும்படியான பாபங்களைச் செய்துள்ளேன். உங்களுக்கு நல்ல குணங்கள் ஸ்வரூபமாக உள்ளது போன்று எனக்குப் பாபம் ஸ்வரூபமாக உள்ளது. (நான்) – யுத்தகாண்டம் (1-12) - தர்மத: பரிரக்ஷிதா: – தர்மத்தால் காப்பாற்றப்பட்டோம் - என்று அவன் இருப்பான்; ஸ்ரீஜனகராஜனுடைய புத்திரியாகிய ஸீதை என்பதான நிலையில் இருந்து அல்லவோ நான் தூது விடுகிறேன். (நான் இரந்தேன்) - அவன் என்னை இரந்து நிற்பதை விடுத்து, நான் அவன் போன்று ஆனேன். (இரந்தேன்) - முன்பு அவனுடைய திருவடிகளில் நான்கு முறை சரணம் புகுந்தார். இப்போது அவனுடைய அடியார்களிடம் சரணம் புகுகிறார். அவனிடம் புகுந்த சரணத்தைக் காட்டிலும் அடியார்களிடம் புகும் சரணத்தின் ஏற்றத்தைக் கூறுகிறார். அவனிடம் புகுந்த சரணம் தப்பினாலும், அடியார்களிடம் புகுந்த சரணம் தப்பாது. ஏன் தப்பாது என்றால், இதற்குத் தடையான காரணம் ஏதும் இல்லை என்பதால் ஆகும். ஆனால் "இரந்தேன்" என்பது சரணாகதியைக் கூறுமோ என்பதற்கு விடை அளிக்கிறார். ப்ராத்தனை என்பதைச் செய்யும் புத்தியால் அன்றோ சரணாகதி ஏற்படுகிறது! பக்தி போன்ற பல உபாயங்கள் உள்ளபோது சரணாகதியில் ஏன் ஈடுபட்டாள் என்றால், தப்புதல் இல்லாத உபாயத்தைப் பற்றுகிறாள் என்பதால் ஆகும்.

வ்யாக்யானம் - (இனங்காள் இரந்தேன்) மிதுனமாயிருப்பார்க்கு இரந்தார் வாசி தெரியுமிறே. சரணாகதர்க்குத் தன்னுயிரைக் கொடுக்குமவையே. நன்னலப் புள்ளினங்களன்றியே படுகொலைக்காரர்க்கும் இரங்கவேண்டும்படியிறே என்னுடைய தசை.

விளக்கம் – (இனங்காள் இரந்தேன்) – "இனங்காள்" என்று பன்மையில் ஏன் கூறவேண்டும் என்றால், இருவராக உள்ளவர்களுக்கு அல்லவோ இவ்விதம் இரங்கி நிற்கும் நிலை புரியும். இவ்விதம் புரிவதற்கான காரணம், சரணாகதி செய்தவர்களுக்குத் தன் உயிரையும் கொடுப்பவை என்பதால் ஆகும். "நன்னலப் புள்ளினங்காள்! இரந்தேன்" என்று கூறுவதே போதுமானதாக உள்ளபோது, "விளையாட்டியேன்" என்று தனது குறையை ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்; சிறந்த குணங்கள் கொண்ட அந்தப் பறவைகள் மட்டும் அல்லாமல், படுகொலைகள் செய்பவர்களும் கூட இரக்கம் கொள்ளும்படியாக அல்லவோ எனது நிலை உள்ளது!

வ்யாக்யானம் - (நன்னலப்புள்ளினங்காள் இரந்தேன்) சரண்யதை குறைவற்றிருந்தபடி யென்தான்!

விளக்கம் - (நன்னலப்புள்ளினங்காள் இரந்தேன்) - ஆனால் இந்த பறவைகளிடம் சரணம் புகும்படி உள்ளதற்கு இவை தகுதி கொண்டவையோ என்பதைக் கூறுகிறார். சரணாகதி அடைவதற்கு ஏற்றபடி உள்ள தன்மை உங்களிடம் குறைவின்றி உள்ளது என்பது எத்தகைய ஆச்சர்யமாக உள்ளது! அதாவது "நலம்" என்பதால் வாத்ஸல்யத்தையும், "புள்" என்ற சிறகுகள் மூலம் ஞானம் போன்றவற்றையும், "இனம்" என்பதன் மூலம் புருஷகாரம் என்பதான சிபாரிசு செய்யும் தன்மையையும், "இனங்காள்" என்பதால் "ஸ்ரீமத்" என்ற சொல்லின் அர்த்தத்தையும், "நன்னலப் புள்" என்று நாராயண பதத்தின் அர்த்தத்தையும், "இரந்தேன்" என்பதன் மூலம் "சரணம் ப்ரபத்யே" என்ற இரண்டு சொற்களின் அர்த்தத்தையும், "நான்" என்பதன் மூலம் அதிகாரியையும் கூறுகிறது; இப்படியாக இங்கு சாணாகதி கூறப்பட்டது.

வ்யாக்யானம் - (நானிரந்தேன்) அவனிறே, "ஸுக்ரீவம் சரணம் கத:" என்று திர்யக்கின் காலிலே முற்பட விழுந்தான்; பின்பிறே இவள், "ததா குரு தயாம் மயி" என்றது. (வினையாட்டியேன் நானிரந்தேன்) எல்லாங் கொடுத்தாலும் அவற்றுக்கு ஒன்றும் செய்ததாகத் தோற்றாதே பல்காட்டுகிறாள். அவர்கள் பண்ணுகிற உபகாரம் அளவுபட்டிருக்கிலிறே ஸத்ருசமாக ஒன்று தேடிக் கொடுக்கலாவது. எல்லாங் கொடுத்தாலும், "க்ருத்ஸ்நாம்வா ப்ருதிவீம் தத்யாந்நதத் துல்யம் கதஞ்சந" என்று "செய்தது போராது" என்னும் இதுவேயிறே நெஞ்சில் பட்டுக்கிடப்பது. "தஸ்மைநத்ருஹயேத்" என்னுமளவில் நிற்குமதன்றே; "க்ருதமஸ்ய ஜாநந்".

விளக்கம் - (நான் இரந்தேன்) - அடுத்து மேலே கூறிய "அத்தலை இத்தலையானபடி" என்பதை விளக்குகிறார். அவன் அல்லவோ முதலில் கிஷ்கிந்தாகாண்டம் (4-19) – ஸுக்ரீவம் சரணம் கத: - ஸுக்ரீவனைச் சரணம் புகுந்தான் - என்பதாக வானரத்தின் காலில் முதலில் விழுந்தான். அதன் பின்பு அல்லவோ இவள் ஸுந்தரகாண்டம் (40-3) - ததா குரு தயாம் மயி - என் விஷயத்தில் நீ இப்படி அருள் புரிவாயாக – என்று அனுமனிடம் கூறினாள்! (வினையாட்டியேன் நானிரந்தேன்) – முதலில் "பொன் உலகு ஆளிரோ" என்று கூறி விட்டு, தொடர்ந்து "விளையாட்டியேன்" என்று தனது குறையைக் கூறினாள்;

இதன் மூலம், இவற்றுக்கு அனைத்தையும் அளித்தாலும், அவற்றுக்கு ஏதும் செய்யவில்லை என்பதாகவே தோன்றுகிறது. எதற்காக இப்படிக் கூனிக் குறுக வேண்டும்? இவை செய்த உதவிக்கு ஏற்ப கைம்மாறு செய்யலாமே என்றால், அவைகள் செய்த உபகாரம் ஒரு அளவுபட்டால் அல்லவோ, அந்த அளவிற்கு ஒப்பாக ஏதேனும் தேடித் தர இயலும்! இதன் மூலம் இந்தப் பறவைகள் விஷயத்தில் இவளுக்குள்ள செய்ந்நன்றி அறிதல் என்ற தன்மை வெளிப்படுகிறது என்பதை ஒரு ப்ரமாணத்தால் கூறுகிறார்; அனைத்தையும் அளித்தாலும், மஹாபாரதத்தில் – க்ருத்ஸ்நாம்வா ப்ருதிவீம் தத்யாந்நதத் துல்யம் கதஞ்சந – பணிவிடை செய்தாலும், உலகம் முழுவதையும் அளித்தாலும், ஒரு குரு செய்த உதவிக்கு ஒப்பாகாது - என்பதற்கு ஏற்ப, “செய்தது போதாது” என்பதே நெஞ்சத்தில் உள்ளது. இதன் மூலம் விளங்கும் கருத்து என்னவென்றால், ஆபஸ்தம்ப ஸூத்ரம் - தஸ்மைநத்ருஹயே – அவருக்கு துரோகம் இழைக்கக்கூடாது - என்பதே நிற்கும் என்பது மட்டும் அல்ல; க்ருதமஸ்ய ஜாநந் - அவர் செய்த உபகாரத்தை அறிந்தவனாக - என்பதே ஆகும்.

வ்யாக்யானம் – அங்கு நின்றும் மீண்டாலிறேயதுதான் வேண்டுவது; அவன் செய்த உபகாரத்தினின்றும் மீண்டாலிறே த்ரோஹ நிஷேதம் சொல்லவேண்டுவது. இதெல்லாம் சொல்லவேணுமோ? அவன்தான் வரும் ஸ்வபாவனாகிலன்றோ நாங்களறிவிப்ப தென்னில்; என் பாக்ய ஹாநியாலே இழந்தேனத்தனை போக்கி, அவன் படியைப் பார்த்தால் இழக்கவேணுமோ என்கிறாள். (முன்னுலகம் இத்யாதி) அழிந்தவற்றை அடியே பிடித்துண்டாக்குமவன் கிடீர்! இத்தலையுமழிந்திறே கிடக்கிறது. ஆர் பிரிவுக்குச் சளைத்துத் தளர்ந்து தூதுவிட, இவற்றை யுண்டாக்கிற்று? வெறும் தன் க்ருபையாலே செய்தானித்தனையிறே! பண்டு இவனுக்கு ஆர்த்த ரக்ஷணம் பண்ணுகைக்குத் தூது விடவேண்டாகிடீர்! (முன்னுலகங்களெல்லாம் படைத்த முகில்வண்ணன்) ஜல ஸ்தல விபாகம் பாராதே, “பஹுஸ்யாம்” என்கிற ஸங்கல்ப ஜ்ஞாநத்தாலே ஏற்கவே யிவற்றை யுண்டாக்கினவன்.

விளக்கம் – அங்கு சென்று செயலைச் செய்து முடித்து விட்டு திரும்பினால் அல்லவோ? இவை அனைத்தையும் நாங்கள் கூறவேண்டுமோ? அவன் இங்கு வரும் ஸ்வபாவம் கொண்டிருந்தால் அல்லவோ நாங்கள் கூறமுடியும்? எனது பாபங்கள் காரணமாக அவனை இழந்தேன் அல்லாமல், அவன் விதத்தைப் பார்த்து இழக்கவேண்டுமோ என்று கூறுகிறாள். (முன்னுலகம் இத்யாதி) - அவன் விதம்

என்ன என்பதற்கு விடை அளிக்கிறார்; அழிந்த அனைத்தையும் மீண்டும் முதலில் தொடங்கி ஸ்ருஷ்டிப்பவன் என்பது காண்க. நானும் அவ்விதம் அழிந்தல்லலோ கிடக்கிறேன்? யாருடைய பிரிவின் காரணமாக, அந்தப் பிரிவால் ஏற்படும் களைப்பை நீக்கும்விதமாக இந்தப் பறவைகளைத் தூது விடப் படைத்தான்? தனது க்ருபையால் மட்டுமே அல்லவோ படைத்தான்? முன்பு இவனுக்கு, துன்பம் அடைந்தவர்களைக் காப்பதற்காகத் தூது விட வேண்டாபடி இருந்தது கண்டீர்களா? (முன்னுலகங்களெல்லாம் படைத்த முகில்வண்ணன்) - நீர் நிலம் என்ற வேறுபாடு ஆராயாமல் உபநிஷத்தில் – பஹுஸ்யாம் - பலவாகக் கடவேன் - என்று ஸங்கல்பம் செய்து, இவற்றை முன்பே உண்டாக்கியவன். தனது பேறாகக் கொடுப்பவன் என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் - (முகில்வண்ணன்) தரமிட்டாலும் விடவொண்ணாத வடிவு; தன் பேறாகக் கொடுக்குமவன் என்றுமாம். (முகில்வண்ணன் கண்ணன்) ஜகத் காரணத்வத்துக்கும் அவதாரத்துக்கும் அடியான ஔதார்யாதி குணங்களைச் சொல்லுகிறது. அன்றிக்கே, அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தாநத்தோடே வந்து அவதரித்தபடியைச் சொல்லிற்றாகவுமாம். (என்னலங் கொண்ட பிரான்) இதொரு பழங்கிணறு கண்வாங்குகிறதென்? என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணின உபகாரகன்; உங்கள் காலிலே விழும்படி பண்ணினவன். இப்போது அகலவிருந்ததொழியப் பண்டு செய்தவையெல்லாம் சால நன்றுகிடீர்! எங்களோடு கலப்பதுக்கு முன்பு போர நீர்மையுடையான்; இப்போது வடிவழகே கிடீர் உள்ளது. (முகில்வண்ணன் என்னலங் கொண்ட) அம்மேகம் வர்ஷிக்கும் இடமாகாதே, முகக்கும் இடமானேன்.

விளக்கம் - (முகில்வண்ணன்) - அவன் ஏற்ற தாழ்வுகள் கொண்டு காப்பாற்றினாலும், விட இயலாத வடிவழகு கொண்டவன். (முகில்வண்ணன் கண்ணன்) - இந்த ஜகத்தைப் படைப்பு காரணமாக உள்ள தன்மை, பல அவதாரங்கள் எடுக்கக் காரணமாக உள்ள தன்மை போன்ற பலவற்றுக்கும் காரணமாக உள்ள வள்ளல் தன்மை முதலானவற்றைக் கூறுகிறார். அதாவது இந்த ப்ரக்ருதியின் ஸம்பந்தம் இல்லாத திவ்யமான திருமேனியுடன் வந்து அவதரித்த விதத்தைக் கூறினார் என்றும் கொள்ளலாம். (என் நலம் கொண்ட பிரான்) - அவன் வருவான் என்று உறுதிபட உரைப்பதற்கு ஜகத் ஸ்ருஷ்டி போன்ற பழைய நிகழ்வுகளைக் கூறவேண்டுமோ? என்னைத் தனக்கே என்று ஆக்கிக்கொண்ட செயல் போதாதோ என்பதாகக் கூறுகிறாள்; இதற்கு ஒரு பழைய கிணற்றை ஏன்

தூர் வாரவேண்டும்? என்னுடைய அனைத்தையும் கவர்ந்து எனக்கு உதவி செய்த உபகாரகன்; உங்கள் கால்களில் விழுப்படிச் செய்தவன்; அதாவது இந்த உலகில் உள்ளவர்கள் அனைவரும் ஸர்வேச்வரனாகிய தன்னை மறந்து உண்டு உடுத்து திரிந்தபடி உள்ளபோது, எனக்குத் தன்னிடம் ஈடுபாட்டை ஏற்படுத்தி அதனை நிறைவேற்றுவதற்காக பறவைளாகிய உங்கள் கால்களில் விழும்படியான உபகாரம் செய்தவன். இப்போது இவன் என்னை விட்டு அகன்று நின்றான் என்பதாக உள்ளபோதிலும், ஜகத் ஸ்ருஷ்டி போன்றவற்றை முன்பு செய்து, இங்கு அவதரித்து, என்னை வசீகரித்து, என்னுடன் கலந்து என்று இப்படியாகப் பல உபகாரங்களைச் செய்தவன் அல்லவோ? என்னுடன் கலந்து பிரிவதற்கு முன்பு மிக்க நீர்மை குணம் கொண்டிருந்தான்; இப்போது வடிவழகு மட்டுமே உள்ளது! (முகில்வண்ணன் என்னலங் கொண்ட) - அந்த மேகம் மழை பொழியும் இடமாக நான் இராமல், தண்ணீர் எடுக்கும் இடமாக உள்ளேன்.

வ்யாக்யானம் - (தனக்கு என்னிலைமை) அவன் வருவானானாலும், நாங்கள் சொல்லுவதே தென்னில், “என்னிலைமை” என்று தன் வடிவைக் காட்டுகிறாள்; “ஏஹி பச்ய சரீராணி” என்னுமாபோலே. என்னைக் கண்ட நீங்களே பாசுரமிட்டுச் சொல்லுமத்தனை. ஜகத் காரணத்வம், அவதாரம், தன் பக்கல் பண்ணின விசேஷ கடாக்ஷம் இவையெல்லாம் கண்ணழிவறச் சொன்னாள்; அவன் குணங்களிலே யவகாஹித்த தன்படி தன்னாலும் பேசப் போகிறதில்லை; “தனக்குந் தன் தன்மை அறிவரி யானை”ப்போலே.

விளக்கம் – (தனக்கு என்னிலைமை) - “அவன் வருவான்; ஆயினும் நாங்கள் என்ன கூறவேண்டும்?” என்று பறவைகள் கேட்க, “எனது நிலையைக் கூறுவீர்களாக”, என்று தனது வடிவத்தைக் காண்பிக்கிறாள். இவ்விதம் வடிவத்தைக் காண்பித்தவர்கள் யாரும் உள்ளனரோ என்றால், ஆரண்யகாண்டத்தில் - ஏஹி பச்ய சரீராணி - ராக்ஷஸர்கள் தாக்கிய எங்கள் சரீரத்தைப் பார்க்கவேண்டும் - என்று ரிஷிகள் இராமனிடம் கூறியது போன்று, என்னைக் கண்ட பறவைகளாகிய நீங்களே தகுந்த சொற்கள் கொண்டு எனது நிலையைக் கூறவேண்டும். “நீங்களே தகுந்த சொற்கள் கொண்டு கூறவேண்டும்” என்று ஏன் கூறுகிறாள்; இவ்ளே தூதுச் சொற்க்ளை உரைக்கலாம் உரைக்கலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இந்த ஜகத்தின் காரணமாக இருத்தல், அவதாரம் மற்றும் தன்னிடம் அவன் செய்த சிறப்பான கடாக்ஷம் போன்றவற்றையும் எந்தக் குறையும் இன்றி

முற்றிலுமாக உரைத்தால்; ஆனால், அவன் குணங்களில் மூழ்கி நின்ற தனது விதத்தை இவளால் தன்னாலும் கூற இயலவில்லை; திருவாய்மொழி (8-4-6) - தனக்கும் தன்மை அறியான் - என்பது போன்று உள்ளாள்.

வ்யாக்யானம் - (உரைத்து) தனக்குங்கூட நிலமல்லாத தன்படியை இவை பாசுரமிட்டுச் சொல்லவற்றாகக் கொண்டிருக்கிறாள். கரை மேலே நிற்கையாலே அவற்றுக்குச் சொல்லலாமிறே. "உரைத்து, கொண்டு வாருங்கோள்" என்னாதொழிவானென்? என்னில்; "ஈச்வர க்ருத்யம் நமக்கு பரமோ" என்றிருக்கையாலே; இவனுக்குப் பணி குறையை யறிவிக்கையிறே: மேலுள்ளதெல்லாம் அவன் பணியிறே.

விளக்கம் – (உரைத்த) - தன்னாலும் கூடக் கூற இயலாதவற்றை இந்தப் பறவைகளால் கூற இயலுமோ? தனக்குக் கூட உரைக்க இயலாதபடி உள்ள தனது விதத்தை இவற்றால் தக்க சொற்கள் கொண்டு கூற இயலும் என்று உள்ளாள். எப்படி என்றால், அவை "அவன் மிது உள்ள ஈடுபாடு" என்ற கரை மீது நிற்பதால் ஆகும்; அதாவது இவை தன்னைப் போன்று அவன் குணங்களில் மூழ்காமல் உள்ளதால், அவற்றால் கூற இயலும் என்று கருத்து. "உரைத்த பின்னர் அவனை அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்று ஏன் கூறவில்லை? காரணம், "ஈச்வரனுடைய செயல்பாடுகள் நமக்கு வசப்பட்டவையோ?" என்று எண்ணுவதால் ஆகும். இவற்றின் பணியானது தனது குறையை அறிவிப்பது மட்டுமே ஆகும்; அதன் பின்னர் அவனுடைய செயல் அல்லவோ?

வ்யாக்யானம் - (என்னிலைமை யுரைத்து பொன்னுலகாளீரோ) ஆர்த்த நாதம் கேளாதபடி பண்ணி ஜீவிக்கப் பாருங்கோள்! சக்ரவர்த்தி பெருமாளை முடிசூட்டப் பாரித்தபோது, ருஷிகள் ராக்ஷஸராலே நோவுபடுகையாலே ராஜ்யம் திருவுள்ளத்தில் பொருந்தாமை புறப்பட்டுப் போனாரிறே; அப்படியே ஸ்த்ரீ வதமும் ஆர்த்த த்வநியும் கேட்டால் இவை உபயவிபூதியையும் ஆளமாட்டாதென்றிருக்கிறாள்.

விளக்கம் - (என் நிலைமை உரைத்து பொன்னுலகு ஆளீரோ) - தனது துயரத்தை அவனிடம் உரைத்தால் இவற்றுக்கு இவள் தரும் கைக்கூலி என்னவென்றால், எனது துயர ஒலி கேட்காமல் உங்களால் இருக்க இயலும். துயர ஒலி கேட்டால்

என்னவாகும் என்பதற்கு விடை அளிக்கிறார்; தசரதன் இராமனுக்கு முடி சூட்ட எண்ணியபோது, ரிஷிகள் ராக்ஷஸர்களால் தாக்குண்டனர்; அப்போது ராஜ்யமானது தனது நெஞ்சத்தில் நிற்காமல், அங்கு புறப்பட்டான் அல்லவோ? அது போன்றே பெண் வதையும், துயர ஒலியும் கேட்டால், இந்தப் பறவைகளால் உபயவிபூதியை ஆள இயலாது என்று உள்ளாள்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 4)

1-1-6. கையும் காலும் நிமிர்த்துக் கடார நீர்
பைய ஆட்டிப் பசுஞ் சிறு மஞ்சளால்
ஐய நா வழித்தாளுக்கு அங்காந்திட
வையம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயுளே

பொருள் - கைகளையும் கால்களையும் நிமிர்த்தி, கொப்பரையில் உள்ள நீரினால், சிறிய பசுமஞ்சளுடன் திருமேனிக்குப் பாங்காய் நீராட்டி, மெல்லியதான நாவினை வழிக்க, "ஆ காட்டு ஐய" என்றதும், பிள்ளையான க்ருஷ்ணன் வாயைத் திறக்க, அப்பவள வாய்க்குள் அனைத்து உலகங்களையும் யசோதை கண்டாள்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (கையுமித்யாதி) வடதளசாயிக்கல்லாத தெல்லாமுண்டாகச் செல்லாநின்றதிறே. கடாரத்திலே மருந்துகளும் பரிமள த்ரவ்யங்களுமிட்டு ஸுகந்தவத்தாய்க் காய்ந்த நீரிலே திருக்கைகளையும் திருவடிகளையும் நிமிர்க்கவேணுமென்று தானே ப்ரார்த்தித்துத்தான் நிமிர்த்து, "நிமிர்த்தான்" என்று கொண்டாடி; மெள்ளத் திருமஞ்ஜநம் செய்தருளி, குறுங்கண்ணான பசுமஞ்சளைத் திருமேனியிலே சாத்திக் கையிலே மஞ்சளையெடுத்து "மெல்லிதான நாவை நீட்டியருளவேணும்" என்று ப்ரார்த்திக்க; இங்கேயும் மாத்ரு வசந பரிபாலநம் பண்ணியருள வேணுமென்று நாக்குக்கும் வாய்க்கும் வாசியறியாத பிள்ளைகளைப்போலே அங்காந்து காட்டின நாவை வழித்தவளுக்கு திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து விஸ்வரூபம் காட்டினாப்போலே

இவளுக்குத் திருப்பவளத்துக்குள்ளே ஸமஸ்த லோகங்களையும் காட்ட, இவளும் கண்டாளிறே; வடதளசாயி திருவயிற்றுக்குள்ளே அகடித ப்ரமாண ஸித்தமானதிறே இவள் கண்டது.

மாமுனிகள் வ்யாக்யானம் - (கையும் காலும் நிமிர்த்து) திருமஞ்சநம் செய்கைக்குடலாகத் திருக்கைகளையும் திருவடிகளையும் நீட்டி, திருமேனியின் மார்தவத்துக்கநுகுணமாக நிமிர்த்து. (கடார நீர் பையவாட்டி) திருமேனிக்கு அநுகுணமாக ஔஷதங்களும் ஸுகந்த த்ரவ்யங்களும் கூட்டிக் காய்ச்சின கடாரத்தில் திருமஞ்ஜநத்தாலே திருமேனியலையாமல் மெள்ளத் திருமஞ்ஜநம் செய்து. (பசும் சிறு மஞ்சளால்) இது கீழ் மேலும் அந்வயித்துக் கிடக்கிறது. குறுங்கண்ணான பசுமஞ்சளைச் சாத்தியாய்த்து நீராட்டிற்றும். (ஐயநாவித்யாதி) அப்படியிருந்துள்ள மஞ்சளாலே மெல்லிதான திருநாவை வழித்தவளுக்கு அதுக்கு உடலாக அங்காந்திட, பிள்ளையுடைய வாயுள்ளே ஸகலலோகங்களையும் கண்டாளென்கை. அதுக்கடி, அர்ஜுநனுக்கு திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து வைச்வரூப்யம் காட்டினாப்போலே, இவளுக்கும் திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து தன் வைபவத்தைக் காட்டுகையிறே.

விளக்கம் - (கடாரநீர்) - பெரியாழ்வார் திருமொழி (2-4-3) - காய்ச்சின நீரொடு நெல்லி கடாரத்தில் பூரித்து வைத்தேன் - என்கிறபடியே ஒரு கொப்பரையில், தனது பிள்ளையின் திருமேனிக்கு நன்மை பயக்கும் விதமாக மூலிகைப் பொருட்களையும், வாசனைப் பொருட்களையும் நீரோடு சேர்த்து காய்ச்சி. (கையும் காலும் நிமிர்த்து) - தன் க்ருஷ்ணனின் கைகளையும் கால்களையும் நீட்டி, திருமேனியின் வாட்டம் தீரும் விதமாகவும், திருமேனியின் மென்மைக்குப் பங்கம் ஏற்படாதபடிக்கும் நிமிர்த்து, (பைய வாட்டி) – அந்த நீரினால் மெதுவாக திருமேனி நோகாதபடி நீராட்டி. (பசும் சிறு மஞ்சள்) – நீராட்டும்போது நெருங்கிய கணுக்களை உடைய பசுமஞ்சள் கிழங்கினால் தேய்த்துப், பின் அம்மஞ்சளை எடுத்து திருமேனியில் பூசி, அதனாலேயே மெல்லியதான நாக்கினை வழிக்க, (ஐய நா...) - "ஐய! கண்ணா! வாய்த் திறந்து நா நீட்டுவாய்" என்று யசோதைக் கொஞ்ச, நாவிற்கும் வாயிற்கும் வித்தியாசம் அறியாத பிள்ளையாய், யசோதை முகம் கண்டு மயங்கியவனாய் க்ருஷ்ணன், (அங்காந்திட) - வாயைத் திறந்து மிழற்ற, (வையம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயுளே) - அர்ஜுனனுக்குத் திவ்யமான கண்களை அளித்து விச்வரூபம்

காட்டிக் கொடுத்தது போலே, தனது பவளவாயினுள்ளே அவள் அனைத்து உலகங்களையும் காணும்படி திவ்யமான கண்களைக் கொடுத்துக் காட்டினான்.

1-1-7. வாயுள் வையகம் கண்ட மடநல்லார்
ஆயர் புத்திரன் அல்லன் அருந் தெய்வம்
பாய சீர் உடைப் பண்பு உடைப் பாலகன்
மாயன் என்று மகிழ்ந்தனர் மாதரே

பொருள் - பிள்ளையின் வாயின் உள்ளே உலகங்களைப் பார்த்த, மடப்பத்தையும் ஸ்நேஹத்தையும் உடைய பெண்கள், "இவன் ஆயர் புத்திரன் அல்ல, பெறுவதற்கு அரிய தெய்வம்" என்றும், "பரவிய கல்யாணகுணங்களை உடையவனாய், நீர்மை உடையவனான இந்தச் சிறு பிள்ளை வியப்பூட்டும் சக்திகளை உடையவன்" என்றும் சொல்லிக் கொண்டு மகிழ்ந்தனர்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (வாயுளித்யாதி) இனி மேல் கண்டவள் வார்த்தையிறே. இப்படி கண்டு வ்யதையையும் ஸ்நேஹத்தையுமுடையவளன்றியே "மடநல்லார்" என்று இவன் காட்டக் கண்டவர்களுமுண்டென்று தோற்றுகிறது. இவன் '"ஆயர் புத்திரனல்லன்" என்றும், "ஸ்வயத்நததாலே பேர் நினைப்பார்க்கு நிர்தேசிக்கவுங்கூட அரியன்" என்றும், வ்யதிரேகத்திலே நிர்ணயமும் நிர்தேசத்திலே அருமையையும் நடவா நிற்கச் செய்தேயும், "பரந்த சீரையும் பண்மையுமுடைய பாலகன்" என்று நிர்ணயித்து, பின்னையும் "மாயன்" என்கையாலே ஆச்சர்ய சக்தி யுக்தனென்று இவள் சொல்லுகையாலே, திருவாய்ப்பாடியில் ஸ்த்ரீவர்க்கம் முழுக்க "மாயனாகையாலே ஸ்வலாப ஸித்திக்கு ஹேது பூதன்" என்று மகிழ்ந்தார்களிறே.

மாமுனிகள் வ்யாக்யானம் - (வாயுள் வையகம் கண்ட மடநல்லார்) இப்படி திருப்பவளத்தினுள்ளே லோகங்களைக் கண்ட பவ்யதையையும் ஸ்நேஹத்தையுமுடையவர்கள். "வையமேழும் கண்டாள் பிள்ளை வாயுள்" என்று கீழ் ஒருத்தியாகச் சொல்லிற்றேயாகிலும், அநுபாஷணத்திலே பலராகச் சொல்லுகையாலே, பின்னையும் கூடக் கண்டவர்களுண்டென்று கொள்ளவேணும். அதாவது இவள் கண்டவநந்தரம், அங்கு நின்றவர்களுக்கும் காட்ட, அவனும், தன் வைபவம் எல்லாரும் அறிகைக்காக அவர்களுக்கும் திவ்ய

சக்ஷுஸ்ஸைக் கொடுத்துக் காட்டக் கூடுமிறே. (ஆயர்புத்திரனல்லனருந் தெய்வம்) ஸ்ரீநந்தகோபர் மகனல்லன், பெறுதற்கரிய ஸர்வேச்வரன். (பாய சீருடைப் பண்புடைப் பாலகன்) பரம்பின கல்யாணகுணங்களை யுடையனாய் நீர்மையுடையனான சிறுப்பிள்ளை. (மாயன்) ஆச்சர்ய சக்தி யுக்தன். (என்று மகிழ்ந்தனர்) "மாதரே" இப்படி சொல்லி மிகவும் ப்ரீதைகளானார்கள் ஸ்த்ரீகளென்கை. "வாயுள் வையகம் கண்ட மடநல்லாரான - மாதர் - பாய சீருடைப் பண்புடைப் பாலகன் - ஆயர் புத்திரனல்லன் அரும் தெய்வம் - மாயனென்று மகிழ்ந்தனர்" என்றந்வயம்.

விளக்கம் - (வாயுள் வையகம் கண்ட மட நல்லார்) - இப்படியாக, பவள வாயுள் உலகங்களைக் கண்ட, மடப்பத்தையும் ஸ்நேஹத்தையும் உடையவர்கள். பெரியாழ்வார் திருமொழி (1-1-6) - வையம் ஏழும் கண்டாள் பிள்ளைவாயுள் - என்று கடந்த பாசுரத்தில் ஒருத்தி மட்டும் கண்டதாகச் சொன்னபோதிலும், அவள் வாயாலே மொழிந்த வார்த்தைகள் இவை. அவள் திரும்பச் சொல்லும்போது, தன்னைத் தவிர்த்து மற்றவரும் கண்டனர் என்று சொல்லுகிறாள். அதாவது, அவள் கண்ட பின்பு, அங்கு நின்றவர்களுக்கும் காட்ட, க்ருஷ்ணனும் தன் தாயின் இச்சைக்கு இணங்கவும், தன் பெருமையினை மற்றவர்களும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவும், அவர்களுக்கும் திவ்யமான கண்களைக் கொடுத்து, தனது நீர்மையினால் காட்டினான். (ஆயர் புத்திரன் அல்லன் அரும் தெய்வம்) - ஸ்ரீநந்தகோபர் மகன் அல்ல இவன், பெறுவதற்கரிய ஸர்வேச்வரன். (பாயசீருடைப் பண்புடைப் பாலகன்) - பரவியிருக்கும் கல்யாண குணங்களை உடையவனாய், நீர்மை உடையவனான சிறு பிள்ளை. (மாயன்) - வியக்கவைக்கும் சக்திகளை உடையவன். (என்று மகிழ்ந்தனர் மாதரே) - இப்படியாகச் சொல்லி, மிகவும் ப்ரீதியுடையவர்களாய் ஆனார்கள் ஆயர்குலப்பெண்கள். "வாயுள் வையகம் கண்ட மடநல்லாரான - மாதர் - பாய சீருடைப் பண்புடைப் பாலகன் - ஆயர் புத்திரனல்லன் அரும் தெய்வம் - மாயனென்று மகிழ்ந்தனர்" என்று படிக்கவும்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 3)

தனியன்கள்

5. மணவாளமாமுனிகள் அருளிச் செய்தது
(இதனை ஸோமாசியாண்டான் அருளிச் செய்தது என்றும் கூறுவர்)

மாலைத் தனிவழியே வழிபறிக்க வேணுமென்று
கோலிப் பதிவு இருந்த கொற்றவனே – வேலை
அணைத்தருளும் கையால் அடியேன் வினையைத்
துணித்தருள வேணும் துணிந்து

பொருள் - ஸர்வேச்வரனைத் தனிவழியிலே சென்று கொள்ளை கொள்ளவேண்டும் என்று முயன்று அரச மரம் அடியிலே பதுங்கிக் கொண்டிருந்த அரசனான திருமங்கை மன்னனே! வேலினை அணைக்கும் திருக்கரங்களாலே அடியேனுடைய வினைகளைத் துணிவுடன் வெட்டி அருள் வேண்டும்.

அவதாரிகை - இதில், ப்ரபந்தாந்வய ப்ரதிபந்தகங்களை ப்ரபந்த கர்த்தாவே சேதிக்க வேணுமென்கிறது.

விளக்கம் – இந்தத் தனியனில், ஆழ்வாருடைய ப்ரபந்தங்களில் ஈடுபடாதபடிக்குத் தடுக்கும் வினைகளை ஆழ்வாரே தீர்த்துத் தரவேண்டும் என்கிறார்.

வ்யாக்யானம் - (மாலைத் தனியே வழி பறிக்க வேணுமென்று கோலி) ஸர்வாதிகனைத் தனிவழியிலே வழிபறிக்க வேணுமென்று உத்யோகித்து. ததநுகுணமாகத் திருவரசினடியிலே (பதிவிருந்த) மேலே கோடி வைத்துப் பார்ப்பித்த. (கொற்றவனே) ராஜாவே! பறி கொடுக்குமவன் "தெய்வத்துக்கரசு", பறிக்குமவர் ஆலிநாட்டரசு, பறிக்குமிடம் மரங்களுக்கரசிடம்; இப்படியாயிற்று பறிக்கப் பதிவிருந்தபடி. (வேலையணைத்தருளும் கையால்) "வெட்டிப் பறிக்க" வெடுத்தணைத்த வேலாலே. (அடியேன் வினையை) "அடியேன் நான்" என்று அவனுக்கு அடிமையான உமக்கு அடியேனான அடியேன் வினையை. உமக்கடியோமாகைக்கும் வினைக்கும் என்ன சேர்த்தியுண்டு? "என் பெய்வினையைக் கிட்டிக் கிழங்கொடு தன்னருளென்னு மொள்வாளுருவி வெட்டிக் களைந்த விராமாநுசன்" என்கிறபடியே. (அடியேன் வினையை துணிந்து துணித்தருள வேண்டும்) வழிபறிக்கத் துணிந்தாற்போலே வினையைத் துணிக்கத் துணியவேணும். என் வினையைப் போக்கவேணும் என்று நீர் துணிந்தாலாயிற்றுப் போவது. "பண்டை வல்வினை பாற்றியருளினான்" என்னும்படி பண்ணவேணும்.

விளக்கம் - (மாலைத் தனியே வழிபறிக்க வேணும் என்று கோலி) - ஸர்வாதிகனான ஸர்வேச்வரனை தனி வழியிலே வழிப்பறிக்க வேண்டும் என்று முயற்சி செய்து, இதற்காக திருமணங்கொல்லையிலே உள்ள அரசமரத்தின் அடியில். (பதிவிருந்த) - பதுங்கியிருந்த (கொற்றவனே) - அரசே! பறி கொடுக்கின்றவன் எவன் என்றால்? பெரிய திருமொழி (7-7-1) - தெய்வத்துக்கு அரசு – ஆவான். பறிப்பவர் எவர் என்றால்? ஆலி நாட்டரசு. பறிக்கப்படும் இடம் எது என்றால் மரங்களுக்கு எல்லாம் அரசனான அரசமரம். இப்படி அன்றோ ஸர்வேச்வரனைப் பதுங்கி நின்று வழி பறிக்க முயன்றார்! (வேலை அணைத்து அருளும் கையால்) – வெட்டிப் பறிக்க எடுத்து அணைத்த வேலாலே. (அடியேன் வினையை) - பெரிய திருமொழி (11-8-7) - அடியேன் நான் – அவனுக்கு அடிமையான உனக்கு அடிமையாகியுள்ள அடியேன் வினையை. உனக்கு அடிமையாக இருப்பதற்கும் வினைகளுக்கும் என்ன சம்பந்தம் உண்டு? இராமானுச நூற்றந்தாதி (93) - என் பெய்வினையைக் கிட்டிக் கிழங்கொடு தன் அருள் என்னும் ஒண் வாள் உருவி வெட்டிக்கலைந்த இராமானுசன் - என்கிறபடியே உன்னுடைய ப்ரபந்தங்களில் ஈடுபடுவதற்குத் தடையாக உள்ள என் வினைகளை. (துணிந்து துணித்து அருள வேணும்) - வழிப்பறிக்கத் துணிந்தது போலே, துணித்துப் போக்கவேண்டும். நீ துணிந்தால்

ஒழிய வினைகள் போகாது. கண்ணிநுண்சிறுத்தாம்பில் - பண்டை வல்வினை பாற்றி அருளினான் -என்று மாறன் செய்தது போலே, கலியனே! நீயும் செய்து தரவேண்டும்.

பெரியதிருமொழிதனியன் வ்யாக்யாநங்கள் ஸம்பூர்ணம்
ஸ்வாமி பிள்ளைலோகம்ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்வாமி திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்